01.10.2015

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### குறைந்த விலை பருப்பு சிறப்பு திட்டம் நீட்டிப்பு

சென்னை : ரேஷன் கடைகளில் குறைந்த விலையில், பருப்பு மற்றும் பாமாயில் வழங்கும் திட்டத்தை, மேலும் ஓராண்டுக்கு நீட்டித்து, முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டு உள்ளார். வெளிச்சந்தையில், பருப்பு வகைகள் மற்றும் சமையல் எண்ணெய் விலை அதிகமாக உள்ளது. எனவே, முதல்வர் உத்தரவின் பேரில், துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு ஆகியவை, கிலோ, 30 ரூபாய்க்கும், ஒரு லிட்டர் பாமாயில், 25 ரூபாய்க்கும், ரேஷன் கடைகளில் வழங்கப்படுகிறது. பொது வினியோக திட்டத்தின் கீழ், துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில் ஆகியவற்றை, 2015 செப்., 30ம் தேதி வரை வழங்க, கடந்த ஆண்டு, முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டு இருந்தார்.இப்போதும், வெளிச்சந்தையில், பருப்பு வகைகள், சமையல் எண்ணெய் விலை அதிகமாக இருக்கிறது. எனவே, ஏழை மற்றும் நடுத்தர மக்களின் நலன் கருதி, சிறப்பு பொது வினியோக திட்டத்தை, மேலும் ஓராண்டுக்கு அதாவது, 2016 செப்., 30ம் தேதி வரை நீட்டித்து, முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டு உள்ளார்.இந்த திட்டத்தால், தமிழக அரசுக்கு ஆண்டுக்கு, 2,000 கோடி ரூபாய், கூடுதலாக செலவாகும்.

### முருங்கை இலைக்கு கடும் கிராக்கி

திண்டுக்கல்: புரதச்சத்து, வைட்டமின், கால்சியம் உள்ளிட்ட ஆறு வகையான சத்துக்கள் அதிகளவிலுள்ள செடி முருங்கை இலைகள் உலக

நாடுகளுக்கு ஏற்றுமதிசெய்யப்படுகிறது.மாநில தோட்டக்கலை இயக்குனரகத்தின் ஆய்வில், 100 கிராம் முருங்கை மற்றும் செடி முருங்கை இலையில் புரதச்சத்து 9.4 மி.கி., கால்சியம் 185 மி.கி., மெக்னீஷியம் 147 மி.கி., பொட்டாசியம் 337 மி.கி., வைட்டமின் பி 1.2 மி.கி., வைட்டமின் ஏ 378 மி.கி., உள்ளன.

இதனால் முருங்கை இலை உணவில் சேர்ப்போர் ஆரோக்கியம் அதிகரித்துஉள்ளது என உலக சுகாதார ஆய்வு மைய அறிக்கையில் தெரியவந்துள்ளது.இந்தியாவில் ஆண்டு ஒன்றுக்கு 1.5 மில்லியன் டன் செடி முருங்கை இலை உற்பத்தியாகிறது. இதில் வட மாநிலங்களின் பங்கு 20 சதவீதம். தென்மாநிலங்களில் ஆந்திரா, கர்நாடகம், தமிழகத்தில் 70சதவீதமும் உற்பத்தியாகி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது. சத்துக்கள் நிறைந்துள்ளதால் உலகநாடுகளின் தேவை அதிகரித்துள்ளது. எனவே உற்பத்தியையும், ஏற்றுமதியை யும் அதிகரிக்கும் நோக்கில் மத்திய வேளாண் அமைச்சகம் தேசிய தோட்டக்கலை திட்டத்தில் ஒரு எக்டேருக்கு ரூ.1 லட்சம் மானியமாக வழங்க அறிவுறுத்தியுள்ளது. இதுதவிர தோட்டக்கலைத்துறை செடி முருங்கை இலைகள் சாகுபடிக்கான திட்டங்களை வகுத்து, அதை செயல்படுத்தவும் முடிவு செய்துள்ளது.

திண்டுக்கல் ரெட்டியார்சத்திரம் தோட்டக்கலை உதவிஇயக்குனர்சீனிவாசன் கூறியதாவது: வெளிநாடுகளில் முருங்கை இலை அதிகம் தேவைப்படுகிறது. அதனால் செடி முருங்கை உற்பத்தியை அதிகரிக்க விதைகள், செடிகளாக விவசாயிகளுக்கு வழங்க உள்ளோம். எக்டேருக்கு ரூ.1 லட்சம் மானியமும் வழங்க உள்ளோம், என்றார்.

## மழையால் உப்பளம் தொழில் பாதிப்பு: விலையும் அதிகரிப்பு

ராமநாதபுரம்,:மழையால் ராமநாதபுரம் மாவட்டத்தில் உப்பளம் தொழில் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் ஒரு டன் உப்பின் விலை ரூ.1,800 யை எட்டியுள்ளது.

ராமநாதபுரம் மாவட்டத்தில் சாயல்குடி வாலிநோக்கம், திருப்புல்லாணி, கோப்பேரிமடம், நதிபாலம், சம்பை, திருப்பாலைக்குடி உள்ளிட்ட பகுதிகளில் 5 ஆயிரம் ஏக்கரில் உப்பளம் தொழில் நடக்கிறது. 4 ஆயிரம் தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். இப்பகுதியில் உற்பத்தியாகும் உப்பு தமிழகம் மட்டுமின்றி கர்நாடகம், ஆந்திரா உள்ளிட்ட வெளிமாநிலங்களுக்கும் அனுப்பப்படுகின்றன.ஜனவரி முதல் செப்டம்பர் வரை அதிகளவில் உப்பு தயாரிக்கப்படும். கோடை மழை பெய்ததால் ஏப்ரலில் ஒரு டன் உப்பு ரூ.2 ஆயிரத்திற்கு விற்பனையானது. அதன்பின் படிப்படியாக உப்பு உற்பத்தி அதிகரிக்க துவங்கியது. இதனால் விலையும் டன்னிற்கு ரூ.1,500 கீழே குறைந்தது. இரண்டு நாட்களாக மழை பெய்து வருவதால் வெப்பநிலை குறைந்துள்ளது. மேலும் பாத்திகளிலும் மழைநீர் தேங்கியுள்ளது. இதனால் உற்பத்தி பாதிக்கப்பட்டு விலையும் அதிகரித்து ஒரு டன் உப்பு ரூ.1,800 ஆக உயர்ந்துள்ளது. உப்பின் இருப்பும் குறைந்து வருவதால் மேலும் விலை அதிகரிக்கும் அபாயம் உள்ளது.

உற்பத்தியாளர் ஒருவர் கூறியதாவது: வடகிழக்கு பருவமழை துவங்கிவிட்டாலே உப்பு உற்பத்தி குறைந்துவிடும். சென்ற ஆண்டு நவம்பர், டிசம்பரில் மட்டுமே மழை பெய்தது. இதனால் விலை ஆயிரத்திற்கும் குறைவாக இருந்தது. தற்போது மழை பெய்ய துவங்கியுள்ளதால் உப்பு உற்பத்தி பாதிக்கப்பட்டு விலை அதி கரித்து வருகிறது. தொழிலாளர்களுக்கும் வேலை வழங்க முடியவில்லை, என்றார்.

## வைகை அணை நீர்மட்டம் உயர்வு

ஆண்டிபட்டி: வைகை அணை நீர் பிடிப்பில் மழை தொடர்வதால், அணையின் நீர் மட்டம் உயர்ந்து வருகிறது.சில நாட்களாக தேனி மாவட்டத்தில் பெய்து வரும் மழையால் முல்லை ஆறு, போடி கொட்டக்குடி ஆறு, வருஷநாடு வைகை ஆற்று நீராலும், நீர்பிடிப்பில் இருந்து வரும் நீராலும், வைகை அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

கடந்த செப்., 24 ல் 40.68 அடியாக இருந்த அணையில் நீர்மட்டம், 26 ல் 42.74 அடியாகவும், நேற்று 46.13 அடியாகவும் அதிகரித்தது. நேற்று அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 1420 கன அடியாகவும், அணையில் இருந்து மதுரை, ஆண்டிபட்டி-சேடபட்டி குடிநீருக்காக நீர் திறப்பு வினாடிக்கு 60 கன அடியாகவும் இருந்தது. அணையின் உயரம் 71 அடி. தற்போதைய நீர் இருப்பு 1525 மில்லியன் கன அடி.நேற்று பதிவான மழை அளவு (மி.மீ.,) விபரம்: கூடலூர் 19.5, சண்முகாநதி 8, உத்தமபாளையம் 16.2, வீரபாண்டி 64, மஞ்சளாறு 49, சோத்துப்பாறை 9, பெரியகுளம் 16, போடி 67, தேனி, ஆண்டிபட்டி தலா 6, பெரியாறு 23, தேக்கடி 48, வைகை அணை 3.8, மயிலாடும்பாறை 55.

## தேங்காய் விளைச்சல் அதிகம் இருந்தும் விவசாயிகள் கவலை



திண்டுக்கல்: தேங்காய் விளைச்சல் அதிக மாகியுள்ள நிலையில், விலை உயர்ந்தும் லாபம் கிடைக்காமல் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். திண்டுக்கல் மாவட்டத்தில் ஆத்துார், அய்யம்பாளையம், வத்தலக்குண்டு உட்பட பல இடங்களில் தேங்காய் சாகுபடி செய்யப்படுகிறது. கடந்த சில ஆண்டுகளாக மழை இல்லாததால் விவசாயிகள் தென்னை மரங்களை வெட்டி விற்றனர். இந்தாண்டு மழை பெய்ததால், ஓரளவு தென்னைகள் உயிர் பிழைத்து, காய்க்க துவங்கி உள்ளன.வழக்கத்தை விட இந்தாண்டு காய்ப்புகள் அதிகமாகி டில்லி, மும்பை, குஜராத் உட்பட பல வெளிமாநிலங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.ஒரு காய் ரூ.10 முதல் ரூ.12க்கு விற்கப்படுகிறது. ஆனால் விவசாயிகளிடம் ரூ.3க்குத்தான் கொள்முதல் செய்கின்றனர். இதனால் விவசாயிகளுக்கு லாபம் கிடைக்காமல் கவலை அடைந்துள்ளனர். தென்னை பராமரிப்பு கூலி கூட கிடைக்காமல் அவதிப்படுகின்றனர். வக்கம்பட்டி விவசாயி வி.ராமசாமி கூறியதாவது: தென்னைக்கு ஒரு நாளைக்கு 90 லிட்டர் தண்ணீர் தேவைப்படும். இந்தாண்டு ஓரளவு விளைச்சல் உள்ளது. ஆனால் ஒரு காய்க்கு ரூ.3 மட்டுமே கிடைக்கிறது. ஆனால் வியாபாரிகளோ ஒரு காய் ரூ.9 முதல் ரூ.12 வரை விற்பனை செய்கின்றனர். களை எடுப்பு, மருந்து தெளிப்பு

கூலி கூட கிடைக்கவில்லை. வாங்கிய கடனுக்கு வட்டி கட்ட கூட முடியாமல் அவதிப்படுகிறோம், என்றார்.
வியாபாரி ஏ.நம்பியப்பன் கூறியதாவது: மரத்தில் ஏறி காய்களை பறிக்க வேண்டும். ஒரு தேங்காய் உரிக்க 60 காசு கொடுக்க வேண்டும். ஏற்றுக்கூலி, இறக்கு கூலி, லாரி வாடகை முதல் அனைத்தையும் கணக்கு பார்த்தால், எங்களுக்கும் வருமானம் கிடைக்காது, என்றார்.

**நெல்லுக்கு புதிய கொள்முதல் விலை இன்று முதல் நடைமுறைக்கு வருகிறது**



சென்னை:நெல்லுக்கான ஆதார விலையை, தமிழக அரசு அறிவித்துள்ளது. புதிய கொள்முதல் விலை, இன்று முதல் நடைமுறைக்கு வருகிறது.மத்திய அரசு நிர்ணயிக்கும் நெல் கொள்முதல் விலையுடன், கூடுதலாக ஊக்கத் தொகையை, தமிழக அரசு ஒவ்வொரு ஆண்டும் வழங்குகிறது.
நடப்பு, 'காரீப்' பருவத்தில், விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யப்படும் நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதார விலையை, மத்திய அரசு, சமீபத்தில்

அறிவித்தது. அதன்படி, சன்ன ரக நெல், ஒரு குவிண்டாலுக்கு, 1,450 ரூபாய்; சாதாரண ரக நெல், ஒரு குவிண்டாலுக்கு, 1,410 ரூபாய் என, மத்திய அரசு, ஆதார விலையை நிர்ணயித்துள்ளது. விவசாயிகள் நலனை கருத்தில் கொண்டு, சாதாரண நெல், ஒரு குவிண்டாலுக்கு, 50 ரூபாய்; சன்ன ரக நெல், ஒரு குவிண்டாலுக்கு, 70 ரூபாய் கூடுதலாக வழங்க, முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். எனவே, ஒரு குவிண்டால் சாதாரண நெல்லுக்கு, 1,460 ரூபாய்; சன்ன ரக நெல்லுக்கு, 1,520 ரூபாய் வழங்கப்படும். இப்புதிய கொள்முதல் விலை, இன்று முதல் நடை முறைக்கு வருகிறது.

**குவிண்டாலுக்குரூ.2,000 தேவை!**

உற்பத்தி செலவு உயர்ந்து விட்டது; மின் தட்டுப்பாடு நீடிக்கிறது; பருவ மழை இல்லை; நிலத்தடி நீர் குறைந்துள்ளது; விவசாய தொழிலாளர் கூலி அதிகரித்துஉள்ளது. இதையெல்லாம் மீறித்தான், விவசாயிகள் சாகுபடி செய்கின்றனர்.

ஆனால், சாதாரண நெல்லுக்கு, 50 ரூபாய்; சன்ன ரக நெல்லுக்கு, 70 ரூபாய் மட்டுமே உயர்த்தப்பட்டுள்ளது.குறுவை அறுவடை நெல், ஏற்கனவே கொள்முதல் செய்யப்பட்டு விட்டது. இனி, ஜனவரியில் தான், நெல் கொள்முதல் துவங்கும். 'அக்டோபர் முதல், புதிய கொள்முதல் விலை அமலுக்கு வரும்' என, அரசு அறிவித்துள்ளது.இதை முன்கூட்டியே அறிவித்திருந்தால், விவசாயிகள் பயன் பெற்றிருப்பர். ஜனவரி யில் கொள்முதல் செய்யும் நெல்லுக்கு, குவிண்டாலுக்கு, 2,000 ரூபாய் நிர்ணயம் செய்தால் மட்டுமே, விவசாயிகளுக்கு கட்டுப்படியாகும்.- விருத்தகிரி, பொதுச்செயலர், இந்திய விவசாயிகள் கூட்டமைப்பு.

**ஒரு ஏக்கருக்குரூ.20,000 செலவு!**

ஒரு ஏக்கரில் விதைக்க, 30 கிலோ விதை நெல், 1,000 ரூபாய்க்கு மேல் விற்கிறது. பூச்சிக்கொல்லி மருந்து விலை, லிட்டருக்கு, 500 ரூபாய் உயர்ந்துள்ளது. விவசாயிகள் கூலி, 100 ரூபாய் அதிகரித்துள்ளது. அறுவடை இயந்திர வாடகை, 2,500 ரூபாய்க்கு மேல் வசூலிக்கப்படுகிறது. இந்தக் கணக்குப்படி ஏக்கருக்கு, 20 ஆயிரம் ரூபாய் செலவாகிறது.அறுவடை செய்த நெல், கொள்முதல் மையத்துக்கு செல்ல, வாகன வாடகை; ஏற்ற, இறக்க கூலி; கமிஷன் உட்பட, 1,000 ரூபாய்க்கு மேல் செலவிட நேரிடு
கிறது. எனவே, ஊக்கத் தொகை போதுமான அளவில் இல்லை. குவிண்டாலுக்கு, 500 ரூபாய் கூடுதலாக அறிவித்தால் மட்டுமே விவசாயிகளுக்கு கட்டுப்படியாகும்.
இந்தப் பணத்தை, மத்திய அரசிடம் கேட்டு, வாங்கித் தர வேண்டும். முடியாத பட்சத்தில், மாநில அரசே வழங்க வேண்டும்.- விநாயக மூர்த்தி, தலைவர்,
கொள்ளிடம், கீழணை பாசன விவசாயிகள் சங்கம்.

## குறைந்த விலை பருப்புசிறப்பு திட்டம் நீட்டிப்பு



சென்னை,: ரேஷன் கடைகளில் குறைந்த விலையில், பருப்பு மற்றும் பாமாயில் வழங்கும் திட்டத்தை, மேலும் ஓராண்டுக்கு நீட்டித்து, முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டு உள்ளார்.

வெளிச்சந்தையில், பருப்பு வகைகள் மற்றும் சமையல் எண்ணெய் விலை அதிகமாக உள்ளது. எனவே, முதல்வர் உத்தரவின் பேரில், துவரம் பருப்பு, உளுந்தம் பருப்பு ஆகியவை, கிலோ, 30 ரூபாய்க்கும், ஒரு லிட்டர் பாமாயில், 25 ரூபாய்க்கும், ரேஷன் கடைகளில் வழங்கப் படுகிறது. பொது வினியோக திட்டத்தின் கீழ், துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில் ஆகியவற்றை, 2015 செப்., 30ம் தேதி வரை வழங்க, கடந்த ஆண்டு, முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டு இருந்தார்.இப்போதும், வெளிச்சந்தையில், பருப்பு வகைகள், சமையல் எண்ணெய் விலை அதிகமாக இருக்கிறது. எனவே, ஏழை மற்றும் நடுத்தர மக்களின் நலன் கருதி, சிறப்பு பொது வினியோக திட்டத்தை, மேலும் ஓராண்டுக்கு அதாவது, 2016 செப்., 30ம் தேதி வரை நீட்டித்து, முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டு உள்ளார்.இந்த திட்டத்தால், தமிழக அரசுக்கு ஆண்டுக்கு, 2,000 கோடி ரூபாய், கூடுதலாக செலவாகும்.

**சர்க்கரை ஆலையை நவீனப்படுத்த ரூ.37 கோடி! அரவை திறன் இலக்கை எட்ட முடிவு**

திருத்தணி: கடந்த எட்டு ஆண்டுகளாக, திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை, நிர்ணயித்த இலக்கை எட்ட முடியாததற்கு, பழைய இயந்திரங்களின் அரவை திறன் குறைந்ததே காரணம் என, ஆலை நிர்வாகம் கூறி வந்தது. இந்நிலையில், ஆலையை நவீனப்படுத்த, 37 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்வதாக, நேற்று முன்தினம், சட்டசபையில் முதல்வர் அறிவித்துள்ளார்.

திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை, திருவாலங்காட்டில் இயங்கி வருகிறது. இந்த ஆலைக்கு, திருத்தணி, ஆர்.கே.பேட்டை,

அத்திமாஞ்சேரிபேட்டை, சாலை, அரக்கோணம் மற்றும் கனகம்மாசத்திரம் ஆகிய கரும்பு கோட்ட அலுவலகங்களில் இருந்து, 5,000க்கும் மேற்பட்ட விவசாயிகள், கரும்பு அனுப்புகின்றனர்.

**தனியார் ஆலைக்கு...**

விவசாயிகள், எவ்வளவு ஏக்கரில், கரும்பு பயிரிட்டுள்ளனர் என்பதை கணக்கிட்டு, ஒரு ஏக்கருக்கு, 20 -- 30 டன் என, ஆலை நிர்வாகம், இலக்கு நிர்ணயம் செய்கிறது. ஆனால், 2008-09ம் ஆண்டு முதல், 2014--15ம் ஆண்டு வரை, ஆலை நிர்வாகத்தால் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை, எட்ட முடியவில்லை.

மின்தடை, கரும்புக்கு கூடுதல் விலை, தொழிலாளர்கள் ஊதிய உயர்வு கோரி போராடுவது மற்றும் சில விவசாயிகள் தனியார் ஆலைக்கு கரும்பு அனுப்புவது உள்ளிட்ட காரணங்களால், இலக்கை எட்ட முடிவதில்லை என, ஆலை நிர்வாகம் கூறி வந்தது. **110 விதியின் கீழ்...** மேலும், 1980ம் ஆண்டு, வாங்கிய இயந்திரங்களையே தற்போதும் பயன்படுத்துவதால், அந்த இயந்திரங்களின் அரவை திறன் குறைந்துள்ளது. அதனால், ஒரு நாளைக்கு, 2,200 டன் கரும்பு தான் அரவை செய்ய முடிகிறது. 2,500 முதல் 2,700 டன் அரவை செய்தால்தான், நிர்ணயித்த இலக்கை எட்ட முடியும் என, ஆலை நிர்வாகம் தெரிவித்து வந்தது.இந்நிலையில், தமிழக முதல்வர் ஜெயலலிதா, நேற்று முன்தினம் நடந்த சட்டசபை கூட்டத்தில், 110 விதியின் கீழ், திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலையை நவீனப்படுத்த, 37 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும் என, அறிவித்துள்ளார். இதனால், ஆலையில் உள்ள, பழைய இயந்திரங்களுக்கு பதிலாக, கூடுமான வரையில், புதிய இயந்திரங்கள் பொருத்தி, அரவை திறனை அதிகப்படுத்தலாம். விவசாயிகள், தனியார் ஆலைக்கு கரும்பு அனுப்பாமல் பார்த்துக்

கொண்டால், நிர்ணயித்த இலக்கை எட்ட முடியும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

**புதிய இயந்திரங்கள்**

இதுகுறித்து, திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிர்வாக இயக்குனர் மலர்விழி கூறியதாவது: விவசாயிகள் பயிரிடுவதை அடிப்படையாக கொண்டுதான், இலக்கு நிர்ணயிக்கப்படுகிறது. 2015---16ம் ஆண்டிற்கான அரவை, இம்மாதம் நான்காவது வாரத்தில் துவங்கப்படும். முதல்வர் ஒதுக்கீடு செய்துள்ள, 37 கோடி ரூபாயில், புதிய இயந்திரங்கள் வாங்கி பொருத்தப்படும். இதனால், ஒரு நாளைக்கு, 2,200 டன்னில் இருந்து, 2,500 டன்னாக அரவை திறன் உயரும். இதனால், நடப்பாண்டில் நிர்ணயித்த இலக்கை கண்டிப்பாக எட்ட முடியும். இவ்வாறு அவர் கூறினார்.

**ராமநாதபுரம், தூத்துக்குடியில் கடல்வாழ் உயிரின மெகா கண்காட்சி**

ராமநாதபுரம்,:ராமநாதபுரம், தூத்துக்குடியில் கடல்வாழ் உயிரின மெகா கண்காட்சி அக்டோபரில் நடக்கிறது.மன்னார் வளைகுடா உயிர்க்கோள காப்பகம் ராமேஸ்வரத்தில் இருந்து கன்னியாகுமரி வரை உள்ளது. இந்த பகுதியில் 3,600 அரிய வகை கடல்வாழ் உரினங்கள் உள்ளன. அழிந்துவரும் கடல் பசு, ஆவுலியா, அலுங்காமை, ஓங்கிகள், பெருந்தலை ஆமை, பால் சுறா, கங்கை சுறா, வேளாமீன், வெள்ளசுறா, சவுக்கு திருக்கை, கடல் அட்டைகள், கடல் பஞ்சு உள்ளிட்ட 54 இனங்கள் பாதுகாக்க வேண்டியவையாக மத்திய அரசு அறிவித்துள்ளது. இதனை பாதுகாக்க மன்னார் வளைகுடா உயிர்க்கோள காப்பக அறக்கட்டளை ஏற்படுத்தப்பட்டது. இந்தஅமைப்பு கடல்வாழ் உயிரினங்கள் குறித்து பள்ளி, கல்லுாரி மாணவர்கள், பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த மெகா கண்காட்சி நடத்த உள்ளது. இந்த கண்காட்சி ராமநாதபுரம் முகமதுசதக் தஸ்தகீர் ஆசிரியர் பயிற்சி பள்ளியில் அக்., 7 முதல் அக்., 9 வரையும், தூத்துக்குடி கால்டுவெல்

மேல்நிலைப்பள்ளியில் அக்., 13 முதல் அக்., 15 வரையும் நடக்கின்றன. அறக்கட்டளை இயக்குனர் டாங்கே கூறியதாவது: கண்காட்சியில் கடல்வாழ் உயிரினங்களை அழிப்பதால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பு குறித்து விளக்கப்படும். பதப்படுத்தப்பட்ட உயிரின மாதிரிகள் வைக்கப்படும். கடல்நீரில் உயிருள்ள மீன்கள் இருப்பது போன்ற அமைப்பும் உருவாக்கப்படும். அனைவரும் எந்தவித கட்டணமின்றி கண்டுகளிக்கலாம், என்றார்.

**உலக இதய தினத்தையொட்டி இலவச பரிசோதனை முகாம்**

வில்லியனுார்: அரியூர் வெங்கடேஸ்வரா மருத்துவ கல்லுாரி சார்பில் உலக இதய தினத்தை முன்னிட்டு புதுச்சேரி கடற்கரை சாலை காந்தி சிலை அருகே இலவச பரிசோதனை முகாம் நடந்தது. மருத்துவமனை நிர்வாக அதிகாரி புகழேந்தி தலைமை தாங்கினார். மருத்துவக்கல்லுாரி இதயவியல் துறை தலைவர் டாக்டர் புவனேஸ்வரன் தலைமையிலான மருத்துவ குழு பரிசோதனையும், சிகிச்சையும் அளித்தது.

புதுச்சேரி செஞ்சிலுவை சங்க தலைவர் கோபால், ராஜீவ்காந்தி மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனை மயக்கவியல் துறை தலைவர் சீனிவாசன், வெங்கடேஸ்வரா மருத்துவ கல்லுாரி மனிதவள அதிகாரி பாஸ்கர், மக்கள் தொடர்பு அதிகாரி அருண் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**மீன்கள் வளர்ச்சியடையாததால் விற்பனை குறைவு வளர்ச்சிக்காக பண்ணை குட்டையில் விடும் பணி**

ரிஷிவந்தியம்:சூளாங்குறிச்சி மணிமுக்தா அணையில், விற்பனை செய்யப்படும் மீன்கள் வளராததால், மீண்டும் பண்ணை குட்டையில் விடப்படுகிறது.

ரிஷிவந்தியம் அடுத்த சூளாங்குறிச்சி மணிமுக்தா அணையில், ஆண்டுதோறும் மீன்கள் வளர்க்கப்பட்டு, விற்பனை செய்யப்படுகிறது. கடந்த ஆண்டு 9 லட்சம் மீன் குஞ்சுகள் மணிமுக்தா அணையில் வளர்ப்புக்காக விடப்பட்டன. ஆனால் பருவமழை பொய்த்து, போதிய அளவு தண்ணீர் இல்லாததால், அணையில் நீர்மட்டம் மிகக் குறைவாக இருந்ததால், மீன்கள் வளர்ச்சியில்லாமல் சிறிய அளவிலேயே இருந்தன. இதனால் மீன் விற்பனை தொடங்கி சில நாட்களிலேயே, விற்பனை நிறுத்தப்பட்டது. தற்போது மீண்டும் துவக்கப்பட்டது.

இருப்பினும் மீன்கள் எதிர்பார்த்த அளவு வளர்ச்சியடையாததால், மீன் விற்பனைக்கு மவுசு குறைந்தது. இதனால் அணையில் உள்ள மீன்களை பிடித்து, அருகில் உள்ள பண்ணை குட்டையில் மீண்டும் வளர்ப்பிற்கு விடப்படுகிறது.

## மத்திய அமைச்சருடனான பேச்சுவார்த்தை தோல்வியால் இன்று முதல் லாரிகள் ஸ்டிரைக்: அத்தியாவாசிய பொருட்களின் விலை எகிறும் அபாயம்

மத்திய அமைச்சர் நிதின் கட்காரியுடன், அகில இந்திய மோட்டார் காங்கிரஸ் நிர்வாகிகள் நேற்று நடத்திய பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்ததை அடுத்து, இந்திய முழுவதும் இயக்கப்படும், 75 லட்சம் லாரிகள் ஸ்டிரைக் துவங்கி உள்ளது. பண்டிகைகள் வரிசை கட்டும் நிலையில், லாரி ஸ்டிரைக் காரணமாக, அத்தியாவசிய பொருட்களின் விலை எகிறும் என, தகவல்கள் வெளியாகி உள்ளது. சுங்கசாவடி கட்டணத்தை வாகன உரிமையாளர்களிடம் இருந்து ஆண்டுக்கு ஒரு முறை வசூலித்துக் கொள்ளுதல் உட்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, இன்று லாரி ஸ்டிரைக் மேற் கொள்ளப்படுகிறது.

நாடு முழுவதும் உள்ள சுங்கசவடி மற்றும் செக்போஸ்ட்களில் வாகனங்கள் நின்று செல்லுவதால் மனித உழைப்பு மற்றும் பெட்ரோல் டீஸல் விரையம் ஆகிய காரணங்களால், ஆண்டுக்கு, 87 ஆயிரம் கோடி இழப்பு ஏற்படுகிறது. அரசுக்கு சுங்கசாவடி மூலம் கிடைக்கும் ஆண்டு வருவாயான, 14 ஆயிரத்து, 170 கோடி ரூபாயை லாரி உரிமையாளர்கள் செலுத்த தயாராக உள்ளனர். அதை மத்திய தரை வழிப் போக்குவரத்து அமைச்சகமும் ஏற்றுக் கொண்டு சம்மதம் தெரிவித்து உள்ளது. ஆனால், சுங்கசாவடிகளை குறிப்பிட்ட காலத்துக்கு டெண்டர் எடுத்துள்ள நிறுவனங்களுக்கு, பணத்தை வழங்குவது, லாரி உரிமையாளர்களிடம் பணத்தை பெறுவது தொடர்பாக திட்டம் வகுத்து செயல்படுத்த, மூன்று மாத கால அவகாசத்தை, மத்திய அரசு, அகில இந்திய மோட்டார் காங்கிரஸ் நிர்வாகிகளிடம் கேட்டு வருகிறது. இதே கோரிக்கையை மூன்று ஆண்டுகளாக லாரி உரிமையாளர்கள் வலியுறுத்திய போதும், அதை மத்திய அரசு நிறைவேற்றித் தரவில்லை. இதனால், அக்.,1முதல் திட்டமிட்டபடி காலவரையற்ற லாரி ஸ்டிரைக் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. ஸ்டிரைக்கை முடிவுக்கு கொண்டு வரும் வகையில், அகில இந்திய மோட்டார் காங்கிரஸ் தலைவர் பீம்பத்வா, டோல்கேட் கமிட்டி குழுத் தலைவர் சண்முகப்பா ஆகியோரிடம் நேற்று முன்தினம் மத்திய தரை வழிப்போக்குவரத்து துறை செயலாளர் விஜய் பாட்டர் நடத்திய பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது. அதைத் தொடர்ந்து, அகில இந்திய மோட்டார் காங்கிரஸ் நிர்வாகிகளுடன், நேற்று, மத்திய தரை வழிப் போக்குவரத்து துறை அமைச்சர் நித்தின்கட்கரி பேச்சுவார்த்தை நடத்தினார். இந்த பேச்சுவார்த்தையும், எவ்வித முடிவு எட்டப்படாமல் தோல்வியில் முடிந்ததால், நாடு முழுவதும் 75 லட்சத்துக்கும் மேற்பட்ட லாரிகள் இன்று காலை துவங்கிய ஸ்டிரைக்கில் பங்கேற்றுள்ளன.

இது குறித்து, அகில இந்திய மோட்டார் காங்கிரஸின் நிர்வாகக்குழு உறுப்பினரும், மாநில லாரி உரிமையாளர்களின் சம்மேளன

பொருளாளருமான சென்னகேசவன் நிருபர்களிடம் கூறியதாவது: இந்திய அளவில் நவராத்தி பண்டிகை அக்.,12ல் துவங்குகிறது. தொடர்ந்து, தசரா, விஜயதசமி, தீபாவளி என, பண்டிகைகள் வரிசை கட்டும் நிலையில் லாரி ஸ்டிரைக் துவங்கி உள்ளதால், அத்தியாவசிய பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு, விலை கடும் உயர்வு ஏற்பட வாய்ப்புள்ளது. மத்திய, மாநில அரசுகள் இந்த பிரச்சனையை முடிவுக்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பெட்ரோல், டீஸல், காஸ் சிலிண்டர் கிடைக்குமா? சரக்கு போக்குவரத்தில் ஈடுபடும், 68 லட்சம் லாரிகள் மட்டுமே இந்த ஸ்டிரைக்கில் கலந்து கொள்கிறது. அதே நேரத்தில், பெட்ரோல், டீஸல், கச்சா எண்ணெய், காஸ் டேங்கர் பரிமாற்ற பணிகளை மேற் கொண்டு வரும், 7 லட்சம் லாரிகள் இந்த ஸ்டிரைக்கில் கலந்து கொள்ள வில்லை. ஸ்டிரைக்கை முடிவுக்கு கொண்டு வர மத்திய அரசு நடவடிக்கை எடுக்காத பட்சத்தில், எல்.பி.ஜி., டேங்கர் லாரிகளை நிறுத்தம் செய்ய, அதன் உரிமையாளர்களிடமும், பெட்ரோல் பங்க் உரிமையாளர் சங்கங்களிடமும் பேச்சுவார்த்தை நடத்தப்படும். ஸ்டிரைக் முடிவுக்கு வராத பட்சத்தில், இரண்டாம் நாளில் இருந்து டேங்கர் லாரிகளின் இயக்கமும் தடைபட உள்ளது. இதனால், பெட்ரோல், டீஸல், காஸ் சிலிண்டர் கிடைப்பதில் சிக்கல் ஏற்படும். இவ்வாறு, அவர் கூறினர்.

**விவசாயம், கட்டுமானப்பணியில் வேலையளிப்பு திட்ட பயனாளிகள்: தமிழகத்தில் இரண்டாம் கட்டமாக 150 ஒன்றியங்கள் தேர்வு**

சேலம்: தமிழகம் முழுவதும், வேலையளிப்பு திட்டத்தில், விவசாயம், அரசுத்துறை கட்டிடப்பணி ஆகியவை, இரண்டாம் கட்டமாக மேற்கொள்ளப்பட உள்ளது. இதற்காக, 150 ஒன்றியங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. பயனாளிகளுக்கு, அவர்களுடைய திறமையின் அடிப்படையில், தொழிற்பயிற்சி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

பயிற்சியை, வளர்ச்சித்துறை அதிகாரிகள் நேரடியாக கண்காணிக்க அரசு உத்தரவிட்டுள்ளது.

தமிழகம் முழுவதும், 385 ஒன்றியத்தில், 12 ஆயிரத்து, 600 கிராம ஊராட்சிகள் உள்ளன. கடந்த, 2007ம் ஆண்டு, அப்போதைய மத்திய அரசு, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலையளிப்பு திட்டத்தை கொண்டு வந்தது. இத்திட்டத்தின்படி, 100 நாள் வேலை வழங்குவதுடன், குடும்பத்தில் உள்ள உறுப்பினர்கள் ஒன்றன் பின் ஒன்றாக பயன்பெறலாம் என, அறிவிக்கப்பட்டது. ஆரம்பத்தில், 80 ரூபாய் என வழங்கப்பட்ட கூலி, தற்போது, 183 ரூபாயாக உயர்ந்துள்ளது. மத்திய, மாநில அரசு இணைந்து, இத்திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. கடந்த, 2013 - 14ம் ஆண்டில், வளர்ச்சிக்கான தீவிர பங்கெடுத்தல் திட்டம் உருவாக்கப்பட்டது. அதன்படி, வேலையளிப்பு திட்ட பயனாளிகளை, விவசாய பணிகளுக்கும், அரசுத்துறை சார்ந்த, கிராம சேவை மையம், அங்கன்வாடி, இந்திரா நினைவு குடியிருப்பு கட்டிடம் ஆகிய பணிகளில் ஈடுபடுத்துவதென தீர்மானிக்கப்பட்டது. 2016ம் ஆண்டுக்குள், குறிப்பிட்ட அளவிலான ஊராட்சிகளை மேம்படுத்துவதே இதன் நோக்கமாகும். முதல் கட்டமாக, 120 ஒன்றியங்களில், 4,000 கிராமங்கள் கண்டறியப்பட்டு, அங்கு, திட்டமிடல் திட்டத்தில், பணி மேற்கொள்ளப்பட்டன. தற்போது, இரண்டாம் கட்டமாக, 150 ஒன்றியங்களில், 4,500 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. சேலம் மாவட்டத்தில், ஏழு ஒன்றியத்தில், 106 கிராமங்களில், வேலையளிப்பு திட்ட பயனாளிகள், இரண்டாம் கட்ட பணியை மேற்கொள்ள உள்ளனர். திறன் சாராத பயனாளிகளுக்கு, அதிகாரிகள் மூலம் பயிற்சி அளிக்கப்படுகிறது.

சேலம் ஊரக வளர்ச்சித்துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது: நூறு நாள் வேலையளிப்பு திட்டத்தில், தீவிர பங்கெடுத்தல் திட்டம் ஒன்று, 2013 - 14ல் ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்தில், பின் தங்கிய கிராமங்களில்,

அரசு சார்ந்த கட்டிட பணியை மேற்கொள்ளவும், ஏரி தூர்வாருதல், விவசாயம் சார்ந்த பணிகளை செய்வதில், வேலையளிப்பு பயனாளிகளை ஈடுபடுத்தினோம். சேலம் மாவட்டத்தில், முதல் கட்டத்தில், 100 கிராமங்களுக்கு மேல் பங்கெடுத்தன. இரண்டாம் கட்டத்தில், 106 கிராமம் தேர்வாகியுள்ளது. அனைத்து வேலையளிப்பு திட்ட பயனாளிகளும், இதில் ஆர்வம் காட்டுவதில்லை. சிலருக்கு மட்டும் பயிற்சி அளித்து, அதன் கீழ் பணிகளை செய்கிறோம். கிராம சேவை மையம், அங்கன்வாடி கட்டிடம் தான் அதிகம் கட்டப்பட்டுள்ளது. இவ்வாறு, அவர் கூறினார்.

## மேட்டூர் அணை நீர்திறப்பு குறைப்பு: நீர்மட்டம் 70 அடியாக உயர்வு

மேட்டூர்: மேட்டூர் அணை நீர்திறப்பு வினாடிக்கு, 10,000 கனஅடியாக குறைக்கப்பட்ட நிலையில், கடந்த நான்கு நாட்களில், நீர்மட்டம், 4 அடியும், நீர்இருப்பு, 4 டி.எம்.சி.,யும் அதிகரித்துள்ளது.

கடந்த மாதம், 26ம் தேதி மேட்டூர் அணை நீர்மட்டம், 66.24 அடியாகவும், நீர் இருப்பு, 29.55 டி.எம்.சி.,யாகவும் இருந்தது. கர்நாடகா அணைகளில் திறக்கப்பட்ட தண்ணீர் தொடர்ச்சியாக வந்ததால் மேட்டூர் அணை நீர்வரத்து, கடந்த, 27 ம் தேதி வினாடிக்கு, 27,500 கனஅடியாக அதிகரித்தது. அணை நீர்திறப்பை விட, நீர் வரத்து அதிகரித்ததால், ஒன்றரை மாதமாக சரிந்து வந்த நீர்மட்டம், மீண்டும் அதிகரிக்க துவங்கியது. நேற்று அணைக்கு வினாடிக்கு, 19,111 கனஅடி நீர் வந்து கொண்டிருந்தது. நீர்மட்டம், 70.40 அடியாகவும், நீர் இருப்பு, 33.04 டி.எம்.சி.,யாகவும் இருந்தது. கடந்த நான்கு நாட்களில் அணை நீர்மட்டம், 4 அடியும், நீர் இருப்பு, 4 டி.எம்.சி.,யும் அதிகரித்துள்ளது. இந்நிலையில், டெல்டா மாவட்டங்களில் வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்ததால், வினாடிக்கு, 12,000 கனஅடியாக இருந்த மேட்டூர் அணை நீர்திறப்பு, நேற்று வினாடிக்கு, 10,000 கனஅடியாக குறைக்கப்பட்டது.

## 11 டன் காய்கனிகள் திருமலைக்கு பயணம்

ஈரோடு: புரட்டாசி சனிக்கிழமையன்று, திருமலைக்கு வரும் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்குவதற்காக, ஈரோட்டில் இருந்து காய், கனிகள் அனுப்பி வைக்கப்பட்டது. ஈரோடு ஸ்ரீவாரி கருடசேவா, ஸ்ரீவாரி சேவா டிரஸ்ட் சார்பில் ஆண்டுதோறும், ஈரோட்டில் இருந்து காய்கனிகள் அனுப்பி வைக்கப்படுகிறது. அதுபோல், நேற்று ஒரு நாள் மட்டும், 11 டன் அளவிலான பூசணிக்காய், முட்டைகோஸ், பீன்ஸ், கத்திரிக்காய், பக்தர்கள் மற்றும் வியாபாரிகள், பொதுமக்களிடம் இருந்து சேகரிக்கப்பட்டது. ஸ்ரீவாரி சேவா டிரஸ்ட் ஏற்பாட்டின்படி, திருமலைக்கு லாரியில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதில் காய், கனிகள் இலவசமாகவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. வெள்ளிக்கிழமை காலை, இவை திருமலை சென்றடையும். அதன் பின், சனிக்கிழமை நடக்கும் அன்னதானத்துக்கு, இந்த காய்கறிகள் பயன்படுத்தப்படும் என்று, ஸ்ரீவாரி சேவா டிரஸ்ட் தலைவர் உமாபதி தெரிவித்தார்.

## சம்பா சாகுபடி செய்த விவசாயிகள் காப்பீடு திட்டத்தில் சேர அழைப்பு

திருச்சி: சம்பா நெற்பயிர்களுக்கு இயற்கை சீற்றங்களாலும், பூச்சி நோய்களால் ஏற்படும் மகசூழ் இழப்பினை ஈடுகட்ட, தேசிய பயிர் காப்பீடு திட்டத்தில் சேர அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து, திருச்சி மாவட்ட கலெக்டர் பழனிசாமி வெளியிட்ட அறிக்கை: புயல், வெள்ளம், வறட்சி உள்ளிட்ட இயற்கை இடர்பாடுகளாலும், பூச்சி நோய் தாக்குதலாலும், பயிர்களின் மகசூல் பாதிக்கப்படுகிறது. இந்த பாதிப்பில் இருந்து விவசாயிகளை பாதுகாக்க, தேசிய வேளாண் பயிர் காப்பீட்டு திட்டம் உருவாக்கப்பட்டு, செயல் படுத்தப்பட்டு வருகிறது. கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் சேவை வங்கிகள் மூலம் பயிர்கடன் பெற்றுள்ள விவசாயிகள், இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டு உள்ளனர். கடன் பெறாத விவசாயிகளும், இத்திட்டத்தில் சேர்ந்து பயிர் காப்பீடு செய்து பயன்பெறலாம். சம்பா நெல் சாகுபடியில்

பயிர் பாதிப்பு ஏற்படும் போது, உத்தரவாத மகசூலில் இருந்து, நடப்பு பயிரின் மகசூல் எவ்வளவு குறைந்துள்ளதோ, அதே விகிதப்படி நஷ்டஈடு வழங்கப்படும். உத்திரவாத மகசூலை கணக்கிட நெற்பயிருக்கு மூன்று ஆண்டு மகசூல் சராசரியாக எடுத்துக்கொள்ளப்படும். வட்டார அளவில் காப்பீடு செய்யப்பட்ட பயிரின் மகசூல், உத்தரவாத பயிரின் மகசூலை விட குறைவாக இருந்தால், அந்தப் பயிரை காப்பீடு செய்த அனைத்து விவசாயிகளுக்கும், மகசூல் குறைவு விகிதப்படி இழப்பீடு வழங்கப்படும். பயிர் காப்பீடு செய்வதற்கான பிரீமியம் தொகையில் கடன்பெறாத சிறு, குறு விவசாயிக்கு, 55 சதவீதமும், இதர விவசாயிகளுக்கு, 50 சதவீத மானியத்தை அரசே செலுத்தி விடுவதால், மீதமுள்ள தொகையை செலுத்தி காப்பீடு செய்யலாம். சம்பா நெற் பயிரை பொறுத்த மட்டில், ஒரு ஏக்கர் பயிர் காப்பீடு செய்ய, கடன் பெறாத சிறு, குறு விவசாயிகள், 134 ரூபாயும், இதர விவசாயிகள், 149 ரூபாய் செலுத்தினால் போதும். பயிர் காப்பீடு செய்வதற்கான விண்ணப்பப் படிவங்களை, தங்கள் பகுதி வட்டார வேளாண்மை விரிவாக்க மையம் அல்லது தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்தில் பெற்று, பூர்த்தி செய்து, பயிர் நடவு செய்த ஒரு மாதம் அல்லது, டிசம்பர், 15ம் தேதிக்குள், உரிய தொகையை செலுத்தி, தேசிய பயிர் காப்பீட்டு திட்டத்தில் சேரலாம். இவ்வாறு, அதில் தெரிவித்துள்ளார்.

## வனப்பரப்பை அதிகரிக்க எம்.டி.பி., திட்டம்: மழை பெய்வதால் விரைவுப்படுத்த கோரிக்கை

கரூர்: தமிழகத்தில், மழை பெய்து வருவதால், மாபெரும் மரம் நடவு திட்டத்தை (எம்.டி.பி.,) விரைவுப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.

தமிழகத்தில், ஈரோடு, தர்மபுரி, நாமக்கல், சேலம், நீலகிரி, கோவை, நெல்லை, தேனி ஆகிய மாவட்டங்கள் வனப்பரப்பளவு அதிகம் உள்ளது.

மக்கள் தொகை அதிகரிப்பு, வனப்பராமரிப்பு சரியின்மை போன்ற காரணங்களாக, கடந்த சில ஆண்டுகளாக வனப்பரப்பளவு நாளுக்கு நாள் குறைய துவங்கியது. வாகனங்கள் எண்ணிக்கை, தொழிற்சாலைகளின் எண்ணிக்கை அதிகரிக்க துவங்கியதால், சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்பட்டது. வனங்களின் பரப்பு நாளுக்கு குறைய துவங்கியதால், பருவநிலை மாற்றம் ஏற்பட்டதோடு, கடந்த மூன்று ஆண்டுகளாக பருவமழை ஏமாற்றத்தை ஏற்படுத்தியது. இதன், காரணமாக வனப்பரப்பை உயர்த்துவதற்கும், சுற்றுச்சூழல் பாதிப்பை குறைக்க, கடந்த, 2013-14ல், தமிழகம் முழுவதும், 65 லட்சம் மரக்கன்று நட, மாபெரும் மரம் நடவு திட்டம் (எம்.டி.பி.,) செயல்படுத்தப்பட்டது. இதற்காக, சுற்றுச்சூழல் துறை சார்பில் வனத்துறைக்கு, 29 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்தில், 2.08 லட்சம் மரக்கன்று நட இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டது. இதன்படி, அந்தந்த மாவட்ட வனத்துறை சார்பில், பூவரசு, இளுப்பை, நிலவேம்பு, புங்கன், புன்னை, மந்தாரி உள்ளிட்ட ரக மரக்கன்று வளர்க்கப்பட்டது. இதில், 50 சதவீத மரக்கன்றுகள் யூனியன், பஞ்சாயத்து மற்றும் தனியாருக்கு வழங்கப்பட்டது. வனத்துறையில், 50 சதவீத மரக்கன்று நடவு செய்ய திட்டமிடப்பட்டது. திட்டம் அறிவிக்கப்பட்டதிலிருந்து, பருவமழை ஏமாற்றியதால், எம்.டி.பி., திட்டத்தில் வளர்க்கப்பட்ட மரக்கன்றுகளில், 40 சதவீதம் வரை கருகியது. இதனால், திட்டம் இதுவரை முழுமையடையாமல் உள்ளது. கடந்த சில நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருவதால், நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்துள்ளது. மரக்கன்று வளர்க்க போதிய நீரும் கிடைக்க துவங்கி உள்ளது. எம்.டி.பி., திட்டத்தை விரைவுப்படுத்த வேண்டும் என சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வனத்துறை அதிகாரிகள் கூறியதாவது: எம்.டி.பி., திட்டத்தில், தமிழகம் முழுவதும், மழையின்மையால் திட்டம் முழுமையாக செயல்படுத்த

முடியவில்லை. தற்போது வரை, 70 சதவீத மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டுள்ளது. நடப்பாண்டு கூடுதல் மரக்கன்று வளர்த்து கொடுக்க திட்டமிட்டுள்ளோம். தற்போது, பெய்யும் மழையால் மீதமுள்ள மரக்கன்றுகளை நட, ஏற்பாடுகள் நடக்கிறது. இவ்வாறு, அவர்கள் கூறினர்.

## கடலை விதைப்பில் வேடசந்துார் விவசாயிகள்

வேடசந்துார்:வேடசந்துார் சுற்றுப்பகுதியில் நடப்பு பருவத்திற்கான மழை பெய்ய துவங்கியுள்ளதால் விவசாயிகள் கடலை விதைப்பில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

திண்டுக்கல் மாவட்டத்தில் வேடசந்துார் தாலுகா பகுதி வறட்சி பாதித்த பகுதி. இங்கு பெரும்பாலான மக்கள் மானாவாரி விவசாயத்தை நம்பி உள்ளனர். நடப்பு பருவத்தில், கடந்த சில நாட்களாக மழை பெய்து வருவதால், மானாவாரி விவசாயமாக சோளம், கம்பு, கடலை உள்ளிட்ட விதைப்பு பணிகளில், விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

கோவிலுார் ஊராட்சி புதுாத்துப்பட்டி அருகே மானாவாரி பயிராக நிலக்கடலை விதைப்பு பணி நடந்தது. இதற்காக, கோவிலுார் தோப்புப்பட்டியை சேர்ந்த உழவு மாடுகளுடன் பணியில் ஈடுபட்டனர். சமீப காலமாக பெரும்பாலான விவசாயிகள் வாடகை டிராக்டர்களில் உழவு பணி மேற்கொண்டு வரும் நிலையில், உழவு மாடுகளை கொண்டு ஏர் உழவு மூலம் நிலக்கடலை விதைப்பு பணியில் தொழிலாளர்கள் ஈடுபட்டதை, சுற்றுப்பகுதி மக்கள் ஆர்வமாக பார்த்து சென்றனர்.

மானாவாரி விவசாயமானது, இப்பகுதி விவசாயிகளுக்கு நஷ்டம் இல்லாத வகையில், கைகொடுக்க வேண்டும் என்பதே பலரின் எதிர்பார்ப்பாக உள்ளது.

## சோத்துபாறை அணை நீர்மட்டம் உயர்வு

பெரியகுளம்:பெரியகுளத்திலிருந்து 8 கி.மீ., தொலைவில், மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் சோத்துப்பாறை அணை உள்ளது. அணையின் மொத்த உயரம் 126 அடி. கடந்தாண்டு(2014) அக்., 23ல் அணையில் நீர் நிரம்பி, பாசனத்திற்கு திறக்கப்பட்டது. 2015 மார்ச் 15 வரை, 145 நாட்களுக்கு அணைநீர் வினியோகம் செய்யப்பட்டது. இந்நிலையில் கோடையில் மழை பெய்ததால் 2015 ஏப்., 27ல் அணை நிரம்பி மறுகால் பாய்ந்தது. மதகு பழுதால்

பாசனத்திற்கு தொடர்ந்து தண்ணீர் வெளியேறியது. இதனால், கடந்த மாத துவக்கத்திலிருந்து அணையின் நீர் மட்டம் குறைய துவங்கியது.

இந்நிலையில், கடந்த 5 நாட்களாக நீர்பிடிப்பு பகுதியில் மழை பெய்து வருவதால், அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. கடந்த செப்., 24 ல் 82 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம், தொடர்ந்து பெய்த மழையால் நேற்று 87 அடியாக உயர்ந்தது. அணைக்கு வினாடிக்கு 40 கனஅடி நீர் வரத்து உள்ளது.

இதே நிலை தொடர்ந்தால், விரைவில் அணையின் நீர் மட்டம் முழுஅளவான 126 அடியை எட்டிவிடும் . இதனால் பழைய ஆயக்கட்டு பகுதிகளான பெரியகுளம் கண்மாய், தாமரைக்குளம் கண்மாய், பாப்பிபட்டி கண்மாய், மேல்மங்கலம் பாசனப்பகுதிகளில் உள்ள 1,892 ஏக்கர் விவசாய நிலங்களும், புதிய ஆயக்கட்டு பகுதிகளான லட்சுமிபுரம் பகுதிகளில் உள்ள 1,040 ஏக்கர் விவசாய நிலங்களும் பயன்பெறும் என விவசாயிகள் எதிர்பார்ப்பில் உள்ளனர்.

**ஒரு வாரமாக தொடர் மழை பெய்தும் கண்மாய்களுக்கு நீர் வரத்து இல்லை ஆண்டிபட்டி விவசாயிகள் ஏமாற்றம்**

ஆண்டிபட்டி:ஆண்டிபட்டி பகுதியில் ஒரு வாரமாக தொடர் மழை பெய்தும் கண்மாய்களுக்கு நீர் வரத்து இல்லை. இதனால் விவசாயிகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

ஆண்டிபட்டி ஒன்றியத்தில் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கர் நிலங்களில் மானாவாரி பாசனமும், 7 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கர் நிலங்களில் இறவை பாசனமும் நடந்து வருகிறது. கடந்த சில ஆண்டுகளாக இப்பகுதிகளில் போதிய மழை இல்லாததால் கண்மாய்கள் நிரம்பவில்லை. கடந்த சில நாட்களாக பெய்து வரும் தொடர் மழையை நம்பி மானாவாரி நிலங்களில் விவசாயிகள் பணிகளை துவக்கி உள்ளனர்.

ஆண்டிபட்டி ஒன்றியத்தில் உள்ள 20க்கும் மேற்பட்ட கண்மாய்கள், குளங்களை நம்பியே நிலத்தடிநீர் ஆதாரம் உள்ளது. குளங்கள், கண்மாய்கள் வற்றிவிட்டால் நிலத்தடி நீர் மட்டம் பாதிப்படைந்து, இறவை பாசன விவசாயத்திலும் பாதிப்பு ஏற்படும். இந்த ஆண்டு தென்மேற்கு பருவ மழை ஆண்டிபட்டி பகுதியில் கடந்த ஒரு வாரமாக தொடர்ந்து பெய்தாலும் கண்மாய்களுக்கான நீர் வரத்து இல்லை.

இதனால் கோத்தலூத்து அதிகாரி கண்மாய், பிச்சம்பட்டி கண்மாய், கொத்தப்பட்டி புல்வெட்டி கண்மாய், ஏத்தக்கோயில் கண்மாய், போடிதாசன்பட்டி கண்மாய், ஜி.உசிலம்பட்டி,தெப்பம்பட்டி, ஆசாரிபட்டி கண்மாய்கள், பாலசமுத்திரம் கண்மாய், ரெங்கசமுத்திரம் சக்கிலிச்சியம்மன் கண்மாய், ஜம்புலிபுத்தூர் கண்மாய் ஆகியவை காய்ந்தே கிடக்கிறது. இதனால் விவசாயிகள் ஏமாற்றம் அடைந்து உள்ளனர்.

## கால்நடை பாதுகாப்பு முகாம் இன்று துவக்கம்

ராமநாதபுரம்: ராமநாதபுரம் மாவட்டத்தில் கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம் அக்., 1 ல் துவங்குகிறது.

கலெக்டர் நந்தகுமார் கூறியதாவது: கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் மாவட்டம் முழுவதும் கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம் நடத்தப்பட உள்ளது. இதில் சினை பரிசோதனை, மலடு நீக்க சிகிச்சை, கருவூட்டல், அறுவை சிகிச்சை போன்றவை அளிக்கப்படும். சிறப்பாக வளர்க்கப்பட்ட கன்றுகளுக்கு பரிசுகள் வழங்கப்படும்.

அக்., 1 ல் போகலூர் ஒன்றியம் வைரவனேந்தலில், அக்., 5 ல் கடலாடி ஒன்றியம் புனவாசலில், நயினார்கோவில் ஒன்றியம் சிறுவயல், அக்., 7 ல் மண்டபம் ஒன்றியம் மானாங்குடியில், அக்., 8 ல் திருவாடனை ஒன்றியம் அச்சங்குடியில், அக்., 9 ல் கரும்பூரில், அக்., 12 ல் கடலாடி ஒன்றியம் உச்சிநத்தத்தில், திருப்புல்லாணி ஒன்றியம் கதைக்குளம், கோரைக்குட்டத்தில் நடக்கின்றன.

அக்., 13 ல் திருவாடனை ஒன்றியம் கொடிப்பாங்கு, ஏரணிக்கோட்டையில், திருப்புல்லாணி ஒன்றியம் நத்தம், குளபதத்தில், அக்., 14 ல் நயினார்கோயில் ஒன்றியம் எஸ்.வி.மங்கலம், ராமநாதபுரம் ஒன்றியம் ஆண்டாவூரணி, சம்பையில், திருப்புல்லாணி ஒன்றியம் செட்டியரேந்தலில் நடக்கின்றன. அக்.,15 ல் திருவாடனை ஒன்றியம் கட்டியவயலில், அக்., 20 ல் மண்டபம் ஒன்றியம் கோரவள்ளியில், அக்., 21 ல் பரமக்குடி ஒன்றியம் ஏனாதிகோட்டையில், அக்., 28 ல் நயினார்கோயில் ஒன்றியம் தேர்த்தாங்கல், திருப்புல்லாணி ஒன்றியம் ரெகுநாதபுரத்தில், அக்., 30 ல் கமுதி ஒன்றியம் டி.வி.எஸ்.புரம், பரமக்குடி ஒன்றியம் விளத்தூரில் நடக்கின்றன, என்றார்.

**பாம்பனில் 105 மி.மீ., மழை**

ராமநாதபுரம்: பாம்பனில் அதிகபட்சமாக 105 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. ராமநாதபுரம் மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் மாலையில் இருந்து பரவலாக மழை பெய்து வருகிறது.

ாமநாதபுரத்தில் பஸ் ஸ்டாண்ட், அரண்மனை, சாலை பஜார் உள்ளிட்ட பகுதிகளில்

மழைநீர் தேங்கியுள்ளதால் மக்கள் சிரமம் அடைகின்றனர்.

நேற்றுகாலை 8 மணி வரை பதிவான மழையளவு விபரம் (மி.மீ.,): கமுதி 57, முதுகுளத்தூர் 9.90, பாம்பன் 105.2, பரமக்குடி 18.90, ராமநாதபுரம் 36.40, திருவாடனை 5, தொண்டி 7.30, பள்ளமோர்குளம் 45, மண்டபம் 36, ராமேஸ்வரம் 40.20, தங்கச்சிமடம் 36, வட்டானம் 103, தீர்த்தாண்டதானம் 62, ஆர்.எஸ்.மங்கலம் 40, கடலாடி 2, வாலிநோக்கம் 17.40, மொத்தம் 621.30.

## இளையான்குடியில் 48 மி.மீ., மழை

சிவகங்கை:மாவட்டத்தில் அதிகபட்சமாக இளையான்குடியில் 48 மி.மீ., மழை பதிவானது. தொடர்ந்து பரவலாக மழை பெய்தால் மட்டுமே பாசன வசதி பெறும் கண்மாய்கள் நிரம்பும் என விவசாயிகள் தெரிவித்தனர்.

மாவட்டத்தில் கடந்த சில மாதங்களாக மழையின்றி விவசாய பணிகள் பாதித்தன. ஆடிப்பட்டத்திற்கு கூட நெல் நடவு பணி செய்ய முடியாத அளவிற்கு மழையின்றி வறண்ட நிலையே காணப்பட்டது. இந்நிலையில் புரட்டாசி மாதத்தில் விவசாயிகளுக்கு ஆறுதல் அளிக்கும் விதத்தில், மானாவாரியாக நெல், பயிர்களை நடவு செய்ய கடந்த சில நாட்களாக பரவலாக நல்ல மழை பெய்துவருகிறது.

நேற்று காலை 8 மணி நிலவரப்படி, இளையான்குடியில் அதிகபட்சமாக 48 மி.மீ., மழை பதிவானது. குறைந்த பட்சம் திருப்புத்தூரில் 3.2 மி.மீ., மழை பதிவாகியுள்ளது.

எதிர்பார்ப்பு: மாவட்டத்தில் மழை பெய்வதற்கு முன்னரே, 30 ஆயிரம் எக்டேரில் விவசாயிகள் நேரடி நெல் விதைப்பு மூலம் நெல் நடவு செய்துள்ளனர். அவர்களிடம் இந்த மழை நல்ல வரவேற்பை பெற்றுள்ளது.

இருப்பினும், தொடர்ந்து மாவட்ட அளவில் பரவலாக நல்ல மழை பெய்தால் மட்டுமே, பாசன வசதி பெறும் கண்மாய்களில் மழை நீர் சேகரமாகும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

மழை அளவு:சிவகங்கை - 23 மி.மீ.,காரைக்குடி - 12மானாமதுரை - 35இளையான்குடி - 48

தேவகோட்டை - 9.2திருப்புத்தூர் - 3.2திருப்புவனம் - 18.2

**சிவகாசியில் 58.6 மி.மீ.,மழை**

விருதுநகர்:வெப்பச்சலனம் காரணமாக மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளில் கடந்த சில நாட்களாக மழை பெய்துவருகிறது. நேற்றுகாலை 8.30 மணிப்படி மழையளவு(மி.மீ.,): அருப்புக்கோட்டை 28.8, சாத்தூர் 32, ஸ்ரீவி., 22, சிவகாசி 58.6, விருதுநகர் 12, திருச்சுழி 14.1, ராஜபாளையம் 8, காரியாபட்டி 35.8, வத்திராயிருப்பு 11, பிளவக்கல் 14.6, கோவிலாங்குளம் 9.4. மழை காரணமாக அணை, கண்மாய், குளம் உள்ளிட்ட நீர்நிலைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை

தினமணி

நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## குறைந்த நீரில் அதிக மகசூல் பெறும் வழி!



சம்பா நெல் சாகுபடியில் குறைந்த நீரைப் பயன்படுத்தி அதிக மகசூல் பெறுவது குறித்து சோழமாதேவி கிரீடு வேளாண் அறிவியல் மையத் தொழில்நுட்ப வல்லுநர் ராஜ்கலா தெரிவித்துள்ள வழிமுறைகள்:

அரியலூர் மாவட்டத்தில் 23,122 ஹெக்டரில் நெல் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. அதிகரித்து வரும் நீர்ப் பற்றாக்குறையால் குறைந்த நீரைப் பயன்படுத்தி நெல் உற்பத்தியை அதிகரிக்கவும், நீர்த் தேவையைக் குறைக்கவும் புதிய தொழில்நுட்பங்கள் கண்டுபிடிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அந்தவகையில், திருந்திய நெல் சாகுபடி முறை மிகவும் குறிப்பிடத்தக்கது. இந்தத் தொழில்நுட்பக்

கோட்பாடுகளான தகுந்த உயர் விளைச்சல் ரகங்கள், சீரிய மேலாண்மை, சிறந்த நீர், களை நிர்வாகம் போன்ற காரணிகள் அதிக விளைச்சலுக்கு வழிவகுக்கும்.

செப்டம்பர், அக்டோபர் மாதத்தில் சம்பா நெல் சாகுபடி செய்யப்படுகிறது. 130 முதல் 135 நாட்கள் வயதுடைய நெல் ரகங்கள் இந்தப் பருவத்தில் சாகுபடிக்கு மிகவும் ஏற்றவை. உயர் விளைச்சல் அளிக்கும் ரகங்களான ஐ.ஆர். 20, பொன்னி, கோ 43, திருச்சி 1, அம்பாசமுத்திரம் 19, ஆடுதுறை 39, ஆடுதுறை 46, ஆடுதுறை 50, கோ. 50 ஆகியவற்றை இப்பருவத்தில் சாகுபடி செய்யலாம்.

ஒற்றை நாற்றாக ஒரு ஹெக்டர் நடவு செய்ய சுமார் 7- 8 கிலோ விதை போதுமானது. ஒற்றை நாற்று சரிவராத தருணத்தில் 2 நாற்றுகளாக நடவு செய்ய 12 முதல் 15 கிலோ விதை போதுமானது.

ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் என்ற அளவில் சூடோமோனாஸ், புளூரசன்ஸ் ஒரு லிட்டர் நீரில் கரைத்து 10 மணி நேரம் ஊறவைத்து நீரை வடிகட்டி பிறகு விதைக்கலாம்.

இவ்வாறு ஊறவைத்த விதையை நனைந்த கோணிச் சாக்கில் கட்டி மூடி 24 மணி நேரம் இருட்டில் வைத்து முளைகட்டிய பிறகு விதைக்கலாம். 14 முதல் 18 நாட்கள் வயதுடைய நாற்றுகள் நடவு செய்ய ஏற்றவை. மேலும், வரிசைக்கு வரிசை 25 செ.மீ., பயிருக்கு பயிர் 25 செ.மீ என்ற அளவில் இடைவெளி அளிப்பதால் பயிருக்கு கிடைக்கும் ஊட்டச்சத்துகள், சூரிய ஒளி, காற்றோட்டம் போன்றவை தேவையான அளவில் கிடைக்க ஏதுவாகின்றன.

மேலும், ஒற்றை நாற்று நடவு செய்வதால் நெல்லில் விதைத் தேவையும் கணிசமாகக் குறைகிறது. இவ்வகையான ஒற்றை நாற்றை நடவு செய்ய 14 முதல் 18 நாட்கள் வயதுடைய நாற்றுகளைத் தேர்வுசெய்து நடவேண்டும்.

பொதுவாக நெல்லுக்கு அதிக நீர் தேவைப்பட்டாலும், அது ஒரு நீர்த்தாவரம் அல்ல. எனவே, குறைந்த நீரைக் கொண்டு அதிக விளைச்சல் பெறும் வழிமுறைகளைக் கையாண்டு நீர்த் தேவையைக் குறைக்கலாம். நெற்பயிருக்கு சாதாரணமாக காய்ச்சலும், பாய்ச்சலுமாக நீர்ப் பாசனம் செய்யலாம். அதாவது மண் மற்றும் நீர்க்கட்டுதல் நடவு செய்த முதல் 10 நாட்களில் மிக முக்கியம். பிறகு, சுமார் 1- 2 செ.மீ. அளவுக்கு நீர்ப் பாசனம் செய்து வயலில் சிறு கீறல்கள் ஏற்படும் தருணம், அடுத்த முறை நீர்ப் பாய்ச்ச வேண்டும். அதன்பிறகு கதிர் உருவாகும் தருணத்தில் இருந்து அறுவடை நிலை வரை 4 முதல் 5 செ.மீ. அளவுக்கு நீர்ப் பாய்ச்சி கட்டிய நீர் மறைந்த உடன் மீண்டும் நீர்க்கட்ட வேண்டும். இவ்வாறு செய்வதால் பயிருக்கு அளிக்கும் நீரின் அளவு சுமார் 20 முதல் 30% சேமிக்கப்படுகிறது.

மேலும், நெல்லுக்கு காய்ச்சலும், பாய்ச்சலுமாக நீர் நிர்வாகம் செய்வதால், வயலில் களைகள் அதிகம் வளர வாய்ப்புள்ளது. எனவே, சரியான களைக்கட்டுப்பாடு மிகவும் அவசியம். சதுர நடவு முறையில் நடவு செய்யப்படுவதால் கோனோ வீடர் என்ற உருளைக் களை எடுப்பானைப் பயன்படுத்தி களைக் கட்டுப்பாடு செய்யலாம். இவ்வாறு களை எடுப்பது நட்ட 10 நாட்களிலேயே செய்யப்பட வேண்டும். 10 நாட்கள் இடைவெளியில் மீண்டும் 2 அல்லது 3 முறைகள் உருளை களை எடுப்பானைப் பயன்படுத்தி களைகளை வயலிலேயே மடக்கிவிட வேண்டும். பிறகு களைக்கருவி கொண்டு 20 ஆம் நாள் ஒரு களை எடுப்பதால் களைகளை நன்கு கட்டுப்படுத்த வாய்ப்புள்ளது. பயிர் நன்கு வளர தகுந்த ஊட்டச்சத்துகள் பெறுவதற்கு கோடையில் சணப்பை, தக்கைப் பூண்டு பயிரிட்டு பின் மடக்கி உழுவதால், மண்ணில் கரிமப் பொருட்களின் அளவு அதிகரிப்பதுடன் பயிருக்கு வேண்டிய தழைச்சத்தும் கிடைக்கிறது. இதனுடன், ஹெக்டருக்கு 326 கிலோ யூரியா, 375 கிலோ சூப்பர் பாஸ்பேட், 100 கிலோ பொட்டாஷ் பரிந்துரை

செய்யப்படுகின்றன.

எனவே, விவசாயிகள் தகுந்த ரகங்களைத் தேர்வு செய்தல், சரியான பயிர் இடைவெளி, ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாகம், காய்ச்சலும், பாய்ச்சலுமாக நீர் மேலாண்மை, கோனோ வீடர் கொண்டு களை நிர்வாகம் போன்ற தொழில்நுட்பங்களை மேற்கொள்வதால் நெல் சாகுபடியில் அதிக விளைச்சலைப் பெறலாம்.

## மக்காச் சோளப் பயிரில் சாகுபடித் தொழில்நுட்பங்கள்



குறைந்த காலத்தில் உடனடி வருவாய் அளிக்கக் கூடியதாக இருப்பதால், தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி மக்காச் சோளத்தை விவசாயிகள் பயிரிட வேண்டும் என தருமபுரி உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை துணை இயக்குநர் பெ.பாஸ்கர் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியது: உணவு, கால்நடைத் தீவனமாக மக்காச் சோளம் பயன்படுவதால், தனிப் பயிராகவும், வரப்பு, ஊடுபயிராக அதிகளவில் மானாவாரி, இறவையில் சாகுபடி செய்யப்படுகிறது. குறைந்த நீரில் 90 முதல் 100 நாள்களில் உயர் விளைச்சல், கூடுதல் வருவாய் பெற புரட்டாசி பட்டத்துக்கு ஏற்ற கோ.1, கோ.எச் (எம்) 5, கோ.எச்.(எம்) 6 ரகங்கள் பரிந்துரைக்கப்படுகின்றன.

ஏக்கருக்கு ரகமாக இருந்தால் 8 கிலோ, வீரிய ஒட்டு ரகங்களுக்கு 6 கிலோ விதை தேவை. விதை மூலம் பரவும் நோய்களைத் தடுக்க கிலோ

விதைக்கு கார்பன்டாசிம் அல்லது திரம் 2 கிராம் அல்லது டிரைக்கோடெர்மா விருடி 4 கிராம் என்ற அளவில் கலந்து ஏக்கருக்கு 2 பாக்கெட் அசோஸ்பைரில்லம் கொண்டு விதைநேர்த்தி செய்து, நிழலில் உலர்த்தி விதைக்க வேண்டும்.

விதைப்புக்குப் பிறகு ஏக்கருக்கு 4 பொட்டலம் அசோஸ்பைரில்லத்தை 20 கிலோ மணல் அல்லது தொழு உரத்துடன் கலந்து சீராகத் தூவ வேண்டும். மண்ணின் வளத்தை மேம்படுத்த ஏக்கருக்கு 5 டன் தொழு உரமிடுவதுடன், மண்ணாய்வுப் பரிந்துரைப்படி பயிரின் தேவையறிந்து உரமிட வேண்டும். இல்லையெனில், 54 கிலோ தழைச்சத்து, 25 கிலோ மணிச்சத்து, 20 கிலோ சாம்பல் சத்து தரக்கூடிய உரங்களை ஏக்ககருக்கு இட வேண்டும். நடவு செய்த 25ஆவது நாளில் 27 கிலோ தழைச்சத்து, 45ஆவது நாளில் 13.5 கிலோ தழைச்சத்தை மேல் உரமாக இட வேண்டும்.

விதைத்த மூன்றாம் நாள் மண்ணில் போதிய ஈரம் இருக்கும்போது பயறு வகைப் பயிர்கள் ஊடுபயிர் செய்யாத நிலையில், ஏக்கருக்கு 200 கிராம் அட்ரசின் களைக்கொல்லியை 360 லிட்டர் நீரில் கலந்து பின்னோக்கியோ அல்லது பக்கவாட்டில் நடந்தவாறோ தெளிக்க வேண்டும். விதைத்த முதல் வாரத்திலிருந்து நான்கு வாரங்கள் வரை பயிரை குருத்து ஈ தாக்கும். இதனைக் கட்டுப்படுத்த, ஏக்கருக்கு 5 கருவாட்டுப் பொறிகளை வயலில் வைத்து ஈக்களை கவர்ந்து அழிக்கலாம். மீதைல் டெமெடான், டைமித்தோயேட், வேப்பங் கொட்டைச்சாறு கரைசல் அல்லது பூச்சிகொல்லி மருந்துகளில் ஏதேனும் ஒன்றைத் தெளிக்க வேண்டும்.

தண்டு துளைப்பான்களின் தாக்குதல் 20ஆம் நாளில் தொடங்கி விடுவதால், 30 முதல் 40 நாள்கள் குருத்து காய்வது தெரியும். முட்டையிலிருந்து வெளிவந்த புழுக்கள் செடியின் குருத்துப் பாகத்துக்கு ஊர்ந்து சென்று பயிரின் குருத்தை உண்பதால், தாக்கப்பட்ட பயிரின்

குருத்து வாடிவிடும்.

இதனைக் கட்டுப்படுத்த குயினால்பாஸ் 5 சதக் குருணை 6 கிலோ அல்லது கார்பரில் 4 சதக் குருணை 8 கிலோ மருந்தை மணலுடன் கலந்து விதைத்ததிலிருந்து 20 நாளில் குருத்தில் இட வேண்டும்.

மக்காச் சோளக் கதிர் மணி பிடிக்கும் தருணத்தில் கதிர் புழுக்கள் அவற்றை உண்டு வளர்வதால், கட்டுப்படுத்த ஏக்கருக்கு கார்பரில் 10 சதத் தூள் 10 கிலோ அல்லது கார்பரில் நனையும் தூள் 400 கிராம் என்ற அளவில் பயன்படுத்தி அழிக்க வேண்டும்.

இதுபோன்ற தொழில்நுட்பங்களைப் பின்பற்றினால் விவசாயிகள் கூடுதல் வருவாய் ஈட்ட முடியும் என்றார் பாஸ்கர்.

## தமிழகம், புதுச்சேரியில் பலத்த மழைக்கு வாய்ப்பு

தமிழகம், புதுச்சேரியில் அடுத்த 24 மணி நேரத்தில், ஆங்காங்கே பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளது என, வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது.

இதுகுறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரி ஒருவர் புதன்கிழமை கூறியதாவது:

வெப்பச்சலனம் காரணமாக, தமிழகம், புதுச்சேரியில் ஒரு சில இடங்களில் மழை பெய்து வருகிறது. கடந்த 24 மணி நேரத்தில், மாநிலத்தின் பெரும்பாலான இடங்களில் மழை பதிவாகி இருக்கிறது.

அதிகபட்சமாக ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலத்தில் 120 மி.மீ. மழை பதிவானது. அதற்கு அடுத்தபடியாக ராமநாதபுரம் மாவட்டம், பாம்பனில் 110 மி.மீ, ஈரோடு மாவட்டம், பவானிசாகரில் 90 மி.மீ, திருநெல்வேலி மாவட்டம், நான்குநேரி, திருவாரூர் மாவட்டம், முத்துபேட்டையில் 80 மி.மீ மழை பதிவானது.

பலத்த மழைக்கு வாய்ப்பு: தமிழகம், புதுச்சேரியில் வியாழக்கிழமை ஆங்காங்கே இடியுடன்கூடிய பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளது. தென்

தமிழகத்தில், தென்மேற்குப் பருவ மழை தீவிரம் அடைந்துள்ளது. அடுத்து வரும் நாள்களுக்கு தமிழகம், புதுச்சேரியில் ஒரு சில இடங்களில் பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளது. சென்னை மாநகரைப் பொருத்தவரை, வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில், நகரின் ஒரு சில பகுதிகளில் இடியுடன்கூடிய மழை பெய்யும். நகரின் அதிகபட்ச வெப்பநிலை 95 டிகிரியாக இருக்கும் என்று அவர் தெரிவித்தார்.

## நெல் கொள்முதல்: குவிண்டாலுக்கு ரூ.70 வரை ஊக்கத் தொகை



நிகழாண்டில் கரீஃப் பருவத்தில் நெல் கொள்முதலுக்காக மத்திய அரசு நிர்ணயித்த ஆதரவு விலையுடன் கூடுதலாக ரூ.70 வரை ஊக்கத் தொகையாக அளிக்கப்படும் என்று முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

இதுகுறித்து புதன்கிழமை அவர் வெளியிட்ட அறிவிப்பு:

வேளாண் உற்பத்தியைப் பெருக்குவதோடு, விளை பொருள்களுக்கு உரிய விலை வழங்கப்பட்டால்தான் விவசாயிகளின் வாழ்வு வளம் பெறும். இந்த அடிப்படையிலேயே, மத்திய அரசு நிர்ணயிக்கும் நெல் கொள்முதல் விலையுடன் கூடுதலாக ஊக்கத் தொகையை எனது தலைமையிலான அரசு ஒவ்வோர் ஆண்டும் அளித்து வருகிறது.

நிகழாண்டில் கரீஃப் பருவத்தில் விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யப்படும் நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை மத்திய

அரசு அண்மையில் அறிவித்துள்ளது. சன்ன ரக நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ.1,450-ம், சாதாரண ரக நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ.1,410 என்று நெல்லுக்கான ஆதரவு விலையை மத்திய அரசு நிர்ணயித்துள்ளது. கூடுதலாக ஊக்கத் தொகை: சாதாரண நெல்லுக்கு குவிண்டாலுக்கு மத்திய அரசு நிர்ணயித்த ரூ.1,410 உடன் கூடுதலாக, தமிழக அரசின் சார்பில் ரூ.50 அளிக்கப்படும். மேலும், சன்ன ரக நெல்லுக்கு மத்திய அரசின் ரூ.1,450 என்ற விலையுடன் கூடுதலாக ரூ.70-ஐ மாநில அரசு அளிக்கும். இதனால், சாதாரண நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ.1,460-ம், சன்ன ரக நெல்லுக்கு ரூ.1,520-ம் கிடைக்கும். நெல்லுக்கான இந்தப் புதிய கொள்முதல் விலை அக்டோபர் 1-ஆம் தேதி முதல் நடைமுறைப்படுத்தப்படும்.

சிறப்பு பொது விநியோகத் திட்டம்: தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் சிறப்பு பொது விநியோகத் திட்டம், அடுத்த ஆண்டு (2016) செப்டம்பர் 30-ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இந்தச் சிறப்பு பொது விநியோகத் திட்டத்துக்கான அரசு உத்தரவு புதன்கிழமையுடன் (செப்டம்பர் 30) முடிவடைய இருந்தது. இந்த நிலையில், அரசு உத்தரவை மேலும் ஓராண்டு காலத்துக்கு நீட்டித்து உத்தரவிடப்பட்டுள்ளது. சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின் கீழ், ஒரு கிலோ துவரம் பருப்பு-உளுத்தம் பருப்பு ஆகியன தலா ரூ.30-க்கும், ஒரு லிட்டர் பாமாயில் ரூ.25-க்கும் தொடர்ந்து வழங்கப்படும். இந்தத் திட்டத்துக்கென தமிழக அரசுக்கு ஆண்டுக்கு ரூ.2 ஆயிரம் கோடி செலவு ஏற்படும் என்றார் முதல்வர் ஜெயலலிதா.

## சாலையோரச் சோலைகள்

இந்தியாவில் பசுமை நெடுஞ்சாலைக் கொள்கையை தொடக்கி வைத்திருக்கிறார் மத்திய போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை

அமைச்சர் நிதின் கட்கரி. இதன் நோக்கம் நெடுஞ்சாலைகளில் மரக்கன்றுகள் நடுதல், மரங்களைப் பிடுங்கி வேறிடத்தில் நடுதல், பராமரித்தல், அழகு செய்தல் ஆகியன. தங்க நாற்கரச் சாலைத் திட்டம் தொடங்கப்பட்டபோதே சிந்தித்திருக்க வேண்டிய செயல்பாட்டை 15 ஆண்டுகளுக்குப் பிறகாவது செயல்படுத்த முற்பட்டிருக்கிறோம் என்பது வரை மகிழ்ச்சி.

தற்போது அமைச்சர் தொடங்கி வைத்துள்ள பசுமை நெடுஞ்சாலைக் கொள்கையின்படி, நெடுஞ்சாலை அமைக்க அரசு ஒதுக்கும் நிதியில் 1% மரம் நடுதல், பராமரித்தல் ஆகியவற்றுக்காக ஒதுக்கப்படும். ஆண்டுக்கு சுமார் ஒரு லட்சம் கோடி ரூபாய் நெடுஞ்சாலைக்காக ஒதுக்கப்படுகிறது என்றால், இதில் ரூ.1,000 கோடி மரம் நடுதல், பராமரித்தலுக்குச் செலவிடப்படும். இந்தப் பணிகளில் உள்ளூர் மக்கள் ஈடுபடுத்தப்படுவர் என்பதால், சுமார் ஐந்து லட்சம் பேர் வேலைவாய்ப்பு பெறுவர். இந்த மரங்களிலிருந்து கிடைக்கும் பலன்களை உள்ளூர் மக்கள் பயன்படுத்திட வகை செய்யப்படும். மரங்கள் வளர்ப்பு, நடப்பட்டுள்ள மரங்களின் எண்ணிக்கை, பராமரிப்பு ஆகியவை ஐ.எஸ்.ஆர்.ஓ. செயற்கைக்கோள்கள் புவன், காகன் ஆகியவற்றின் மூலம் கண்காணிக்கப்படும். சிறப்பான பராமரிப்புக்குப் பரிசுகள் உண்டு.

மாநில அரசுகளும் இதேபோன்ற பசுமை நெடுஞ்சாலைக் கொள்கையை, மாநில நெடுஞ்சாலைப் பணிகளுக்கு ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்று மத்திய அமைச்சர் கட்கரி அறிவுறுத்தியுள்ளார். இக்கொள்கையை முழுமையாக நடைமுறைப்படுத்தும்போது, இந்தியாவின் தற்போதைய பசுமைச் சூழல் 22%-லிருந்து 30% வரை உயரும் என்று கணிக்கப்படுகிறது.

சாலைகளின் இரு மருங்கிலும் மரங்களை வளர்த்து பாதைகளில் நிழல் பரப்புவது என்பது தொன்றுதொட்டு நிலவி வரும் இந்திய மரபு. இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்பு வரை மக்கள் நடந்துதான் பல ஊர்களுக்குச்

சென்றார்கள். வணிகர்களும் அரசு சேவகர்களும் மாட்டு வண்டி, குதிரை வண்டி, குதிரை ஆகியவற்றை பயன்படுத்தினர்.

நடப்போர் மட்டுமன்றி, மாடுகளும், குதிரைகளும்கூட களைப்பில்லாமல் செல்வதற்கு இந்த நிழல் பரப்பிய மரங்கள் உதவின.

ஒரு நூற்றாண்டுக்கு முன்னர், இந்தியாவில் நவீனமுறை சாலைகள் அமைக்கப்பட்டபோதும்கூட இரு மருங்கிலும் மரங்கள் வளர்ப்பதென்பது, சட்டத்தில் இல்லாத இயல்பான நடவடிக்கையாக இருந்தது. அதிலும் குறிப்பாக, மாமரங்களையும் புளிய மரங்களையுமே சாலைகளின் இருமருங்கிலும் பரவலாக வளர்த்துப் பராமரித்தனர். இதில் காய்க்கும் மாங்காய், புளி போன்றவை அந்தந்த ஊராட்சிகளால் ஏலம் விடப்பட்டு, வருவாயும் பெற்றுத் தந்தன.

புளியம் பழம் உதிர்த்தல், அதன் ஓடு நீக்கி, கொட்டை நீக்குதல் போன்றவற்றில் உள்ளூர் பெண்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்தது. உள்ளூர் சிறுவர், சிறுமியர் வைட்டமின் சி அதிகமாக காணப்படும் மாங்காய், புளியங்காய் போன்றவற்றை சாலை ஓர மரங்களில் இருந்து பறித்து உண்பதன் மூலம் அவர்களுக்கு இயற்கையான நோய் எதிர்ப்பு சக்தி உருவாகியது.

சாலையோர மரம் நடுதல் என்பது சங்க காலத்திலிருந்து தமிழகத்தில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் மரபு. இதை ராஜாஜி, காமராஜர் போன்ற முதல்வர்களும் பின்பற்றினர்.

ஆனால், இன்றைய நாற்கரச் சாலைகளில் மரங்களே இல்லை. நடப்பட்டு வளரும் மரங்களிலும் பலன் அளிக்கும் மா, புளிய மரங்கள் காணப்படுவதில்லை.

நெடுஞ்சாலைக்கான நிதி ஒதுக்கீட்டில் 1% பசுமை திட்டத்துக்கு ஒதுக்கப்படுவது நன்று. ஆயினும், பாரபட்சம் இல்லாமல் இருக்க, எந்தெந்தப் பகுதியில், எத்தனை கிலோ மீட்டர் நீளத்துக்குச் சாலைப் பணிகளுக்கு நிதி ஒதுக்கப்படுகிறதோ அந்த மதிப்பில் 1% தொகையை

அதே சாலையில் பசுமைக்காக செலவிடப்படும் என்பதாக இருக்க வேண்டும். இல்லாவிடில், இந்த நிதி வேறு சாலைகளுக்கு தடம் மாற வாய்ப்புள்ளது.

மரங்கள் நடுதல், பராமரித்தலை நெடுஞ்சாலை அல்லது நாற்கரச் சாலை அமைக்கும் தனியாரிடம் ஒப்படைத்தல் கூடாது. அவர்கள் உள்ளூர் பணியாளர்களுக்கு வேலைவாய்ப்பு தரமாட்டார்கள் என்பது மட்டுமல்ல, முறையாகப் பராமரிப்பார்களா என்பதும் சந்தேகமே.

மரம் நடுதல், பராமரித்தல் பணிகளை அந்தச் சாலை செல்லும் ஊராட்சிகளைச் சேர்ந்த மகளிர் குழுக்களிடம் ஒப்படைப்பது திட்டத்தை செம்மையாக்குவது மட்டுமல்லாமல், உள்ளூர் மக்களுக்கும் இந்தப் பணியில் ஈடுபாட்டை ஏற்படுத்தும். பல குடும்பங்களுக்கு வாழ்வாதாரமாக அமையும். சாலைகளில் மா, புளிய மரங்களே நடப்பட வேண்டும் என்பதை அரசு உறுதி செய்ய வேண்டும்.

சென்னையிலிருந்து குமரிமுனை வரையிலுமான நாற்கரச் சாலையின் இருமருங்கிலும் ஆரம்பத்திலேயே மா, புளிய மரங்களை நட்டிருந்தால், இந்நேரம் அவை பூத்துக் காய்த்திருக்கும். மேலும், சாலையின் நடுவே ஆறடி அகலத்துக்கு சாலைப் பூங்கா வழிநெடுகிலும் உள்ளது. இதில் பூச்செடிகளை நட்டு பராமரிப்பதற்கான செலவு எவ்வளவு என்பது நெடுஞ்சாலைத் துறைக்கு மட்டுமே தெரிந்த ரகசியம்.

சென்னை - பெங்களூரு நாற்கரச் சாலையில் வளர்க்கப்பட்ட மரங்கள் பத்தாண்டுகளில் பெரிதாக வளர்ந்த நிலையில், 6 வழிச்சாலை அமைப்பதற்காக வெட்டுகின்ற அவலம் வேதனைக்குரியது. இது அரசின் தொலைநோக்குப் பார்வையில்லாத திட்டமிடலைத்தான் வெளிச்சம் போடுகிறது. சாலை அமைக்கும் பணியின்போது குறுக்கிட்ட மரங்களை வேருடன் பெயர்த்து சாலையோரமாக நடுவதற்கான வாய்ப்புகள் இருந்தும், அதைப் பயன்படுத்த நாம் தவறிவிடுகிறோம்.

## விவசாயிகளின் பயிர்க் கடனுக்கான வட்டி தள்ளுபடி

கர்நாடகத்தில் நிலவும் கடும் வறட்சி காரணமாக விவசாயிகள் பெற்றுள்ள நீண்ட-நடுத்தரக் கால பயிர்க் கடன் வட்டியை மாநில அரசு தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது.

இதுகுறித்து பெங்களூரில் புதன்கிழமை கர்நாடக கூட்டுறவுத் துறை அமைச்சர் எச்.எஸ்.மகாதேவ பிரசாத் செய்தியாளர்களிடம் கூறியது:

மாநிலத்தின் 136 வட்டங்களில் கடும் வறட்சி நிலவுகிறது. இதனால், கூட்டுறவு வங்கிகளில் பெற்றுள்ள பயிர்க் கடனை திருப்பிச் செலுத்த முடியாமல் விவசாயிகள் அவதிப்படுகின்றனர். இதை அறிந்துள்ள மாநில அரசு, அபெக்ஸ் வங்கி, நிலவள வங்கி, கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் பெற்றிருக்கும் நீண்ட-நடுத்தர பயிர்க் கடனுக்கான வட்டியை தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது.

பயிர்க் கடனுக்கான வட்டித் தொகையை கூட்டுறவு வங்கிகளுக்கு மாநில அரசே வழங்கிவிடும். இதன்மூலம் அரசுக்கு கூடுதலாக ரூ.290 கோடி செலவாகும். வறட்சி நிலைத்துள்ளதால், கட்டாயப்படுத்தி விவசாயிகளிடம் பயிர்க் கடன் வசூலிக்கக் கூடாது என்று

கூட்டுறவு வங்கிகளுக்கு மாநில அரசு வழிகாட்டுதல் வழங்கியுள்ளது.

மேலும், பயிர்க் கடன் தவணைத் தொகை விவசாயிகள் ஓராண்டு கழித்து செலுத்த சலுகை அளிக்கப்பட்டுள்ளது. அதாவது, 2016, மார்ச் மாதம்

வரை விவசாயிகள் பயிர்க் கடன் தவணைத் தொகையைச் செலுத்தக் கட்டாயமில்லை.

இதனிடையே, பயிர்க் கடனை முழுமையாகத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று விவசாயிகள் கோரி வருவதை தற்போதைக்கு ஏற்க முடியாது. நிகழ் நிதியாண்டில் 21 லட்சம் விவசாயிகளுக்கு ரூ.9,800 கோடி பயிர்க் கடனை மாநில அரசு வழங்கியுள்ளது.

இதில் 95 சதக் கடன் தொகையை விவசாயிகள் திருப்பிச் செலுத்தியுள்ளனர். இந்த விவசாயிகளுக்கு மறு பயிர்க் கடன் வழங்கப்படும். கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகளுக்கு நீண்ட-நடுத்தரப் பயிர்க் கடனாக ரூ.2,300 கோடி வழங்கப்பட்டுள்ளது. இதற்கான வட்டி ரூ.290 கோடியை மாநில அரசு தள்ளுபடி செய்துள்ளது.

கர்நாடகத்தில் உள்ள தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் ரூ.5.62 லட்சம் கோடி வைப்புத்தொகை இருந்த போதும், 21 லட்சம் விவசாயிகளுக்கு ரூ.23 ஆயிரம் கோடி மட்டுமே பயிர்க் கடன் வழங்கியுள்ளன.

ஆனால், கூட்டுறவு வங்கிகளில் ரூ.22 ஆயிரம் கோடி மட்டுமே வைப்புத்தொகை இருந்தும் ரூ.9,800 கோடி அளவுக்கு பயிர்க் கடன் தரப்பட்டுள்ளது.

வட்டியில்லா பயிர்க் கடன் திட்டத்துக்கு நபார்டு வங்கி ஆண்டுதோறும் 50 சத நிதியை வழங்கி வந்தது. ஆனால், மத்தியில் உள்ள பாஜக அரசு இதை 40 சதமாகக் குறைத்துள்ளது என்றார்.

**"விவசாய இயந்திரங்களை கொள்முதல் செய்து குறைந்த வாடகைக்கு தரவேண்டும்'**

விவசாய இயந்திரங்களை கொள்முதல் செய்து விவசாயிகளுக்கு குறைந்த வாடகைக்கு தரவேண்டும் என்று பெரியநாயக்கன்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்க மகாசபைக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

இச்சங்கத்தின் மகாசபைக் கூட்டம் சங்க அலுவலக வளாகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. கூட்டத்துக்கு, சங்கத் தலைவர் கே.குருந்தாசலம் தலைமை வகித்தார். துணைத் தலைவர் பழனிச்சாமி முன்னிலை வகித்தார். செயலர் (பொறுப்பு) வனஜா ஆண்டறிக்கை வாசித்தார்.

கூட்டத்தில், விவசாய பயன்பாட்டுக்காக டிராக்டர் உள்ளிட்ட இயந்திரங்களை கொள்முதல் செய்து விவசாயிகளுக்கு குறைந்த வாடகைக்கு தரவேண்டும். சங்க நிதியை பெருக்கிடும் வகையில் வணிக வளாகங்கள் கட்டி வாடகைக்கு விட வேண்டும்.

ரசாயன உரவிற்பனை நிலையத்தை விரிவுபடுத்த வேண்டும். சங்கத்துக்கு சொந்தமான நியாய விலைக்கடைகளில் உணவுப் பொருள்கள் தடையின்றி கிடைப்பதை உறுதிப்படுத்தவேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

இதில் தலைவர் கே.குருந்தாசலம் பேசுகையில், "வாடிக்கையாளர்களின் நலனை கருத்தில் கொண்டுதான் அனைத்து திட்டங்களும் செயல்படுத்தப்படுகின்றன. உறுப்பினர்களின் வசதிக்காக சங்க செயல்பாடுகள் அனைத்தும் விரைவாக கணினி மயமாக்கப்பட்டு வருகிறது என்றார்.

பேரூராட்சித் தலைவர் பி.ஆர்.ஜி.அருண்குமார், நிர்வாகக் குழு உறுப்பினர்கள் புதூர் ரங்கதாதன், எஸ்.ஆர்.பழனிச்சாமி, சக்திவேல், பட்டி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். சசிகுமார் நன்றி கூறினார்.

**உழவர் சந்தையில் ரூ.1.23 கோடிக்கு விற்பனை**

தாராபுரம் உழவர் சந்தையில் செப்டம்பர் மாதம் ரூ.1.23 கோடிக்கு காய்கறி விற்பனை நடைபெற்றுள்ளது.

இதுகுறித்து சந்தை நிர்வாகம் சார்பில் புதன்கிழமை வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு:

இந்தச் சந்தைக்கு தாராபுரம், குண்டடம், மூலனூர் சுற்றுவட்டாரர் பகுதிகளில் விளையும் காய்கறிகள், கீரை வகைகளை விவசாயிகள் விற்பனைக்காக கொண்டு வருகின்றனர். இதன்படி 5.82 லட்சம் கிலோ காய்கறிகளை 4,419 விவசாயிகள் கொண்டு வந்து விற்பனை செய்தனர். இதன் மதிப்பு ரூ.1.23 கோடியாகும். இதை 83,090 நுகர்வோர்கள் வாங்கி பயன் பெற்றுள்ளனர்.

### கொடிவேரி அணையில் நீர்வரத்து அதிகரிப்பு

கொடிவேரி அணையில் நீர்வரத்து அதிகரித்ததால் பாலம் கட்டுமானப் பணிக்காக வைக்கப்பட்டிருந்த பொருள்கள் நீரில் அடித்துச் செல்லப்பட்டன.

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வனப்பகுதியையொட்டி உள்ள கடம்பூர் வனப்பகுதியில் செவ்வாய்க்கிழமை இரவு பலத்த மழை பெய்தது.

இதனால் குண்டேரிப் பள்ளம் அணை புதன்கிழமை அதிகாலை 1 மணியளவில் நிரம்பி விட்டது. தொடர்ந்து வந்த தண்ணீர் குண்டேரிப் பள்ளம் ஆறு வழியாக வெளியேற்றப்பட்டு வருகிறது. குண்டேரிப் பள்ளம் அணைப் பகுதியில் இருந்து வெளியேறும் தண்ணீர் பவானி ஆற்றில் கலந்ததால், பவானி ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது.

மேலும், பவானி ஆற்றில் இருந்து கொடிவேரி அணைக்கு புதன்கிழமை அதிகாலை 2 மணிக்கு 550 கன அடி தண்ணீர் வந்தது. ஆற்றின் நடுவே,

அக்கரை கொடிவேரிக்கும், இக்கரை கொடிவேரிக்கும் இடையே புதிய பாலம் கட்டும் பணி கடந்த 6 மாதங்களாக நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் பவானி ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக பாலம் கட்டுமானப் பணிக்காக வைக்கப்பட்டிருந்த பொருள்கள் நீரில் அடித்துச் செல்லப்பட்டன. இதையடுத்து, கட்டுமானப் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன.

## பட்டுப் பூங்கா பணிகள் விரைவில் தொடங்கும்: கோகுல இந்திரா தகவல்



காஞ்சிபுரத்தில் பட்டுப் பூங்கா பணிகள் விரைவில் தொடங்கும் என்று அமைச்சர் கோகுல இந்திரா தெரிவித்தார்.

காஞ்சிபுரம் காமாட்சியம்மன் காலனியில் நெசவாளர் பயிற்சி மையத்தில் நெசவுப் பயிற்சி வகுப்பு தொடக்கம், காமாட்சியம்மன் பட்டுக் கூட்டுறவு சங்கத்தில் நெசவாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி புதன்கிழமை நடைபெற்றது.

இதில் தமிழக கைத்தறித் துறை அமைச்சர் எஸ். கோகுல இந்திரா கலந்து கொண்டு பயிற்சி வகுப்பைத் தொடக்கி வைத்தார். தொடர்ந்து காமாட்சியம்மன் பட்டுக் கூட்டுறவு சங்கத்தில் நடந்த நிகழ்ச்சியில் நெசவாளர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

முன்னதாக அவர் பேசியது: சென்னையில் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தி ரூ. 2.42 லட்சம் கோடிக்கு முதலீட்டை தமிழக முதல்வர் ஈர்த்துள்ளார். அதன்படி, ராமநாதபுரம் மாவட்டம் திருவாடனையில் ரூ. 150 கோடியில் ஜவுளி பூங்கா அமைப்பது குறித்து முதல்வர் அறிவித்துள்ளார். அந்த வகையில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு மூலம் முதல் திட்டமாக ஜவுளி பூங்கா அறிவித்துள்ளது நெசவாளர்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்றுள்ளது.

அதேபோல் பட்டு நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வகையில் ரூ. 10 கோடி ஒதுக்கீடு செய்துள்ளார். நெசவாளர்களின் கூலி 10 சதவீதம் வரை உயர்த்தி அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், பட்டுக் கைத்தறி துணிகளுக்கு 15 சதவீதம் தள்ளுபடி அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் நெசவாளர்களிடம் கைத்தறித் துணிகள் தேக்கம் இல்லாமல் விற்பனை செய்ய வழிவகை கிடைத்துள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில்

ரூ. 12.48 கோடியில் 480 நெசவாளர்களுக்கு பசுமை வீடுகள் திட்டத்தில் வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளது.

1478 நெசவாளர்களுக்கு முதியோர் ஓய்வூதியம், 16,198 பேருக்கு மருத்துவக் காப்பீடு, 1409 பேருக்கு கல்வி உதவித் தொகை, 12,315 பேருக்கு விலையில்லா மின்சாரம்,765 பேருக்கு கடன் அட்டை, 6 சங்கங்களில் 100 நெசவாளர்களுக்கு பிடகுதறி ஆகிய நலத்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பட்டுப் பூங்கா: காஞ்சிபுரத்தில் பட்டுப் பூங்கா திட்டத்தை விரைந்து செயல்படுத்துவதில் தனியார் முன்வர வேண்டும்.

இந்தத் திட்டத்தில் 9 சதவீதம் தமிழக அரசும் 49 சதவீதம் மத்திய அரசும் மானியம் அறிவித்துள்ளது. தமிழக அரசு சார்பில் இடம் ஒதுக்கீடு செய்து தரப்பட்டுள்ளது. பட்டுப் பூங்கா திட்டத்தில் எந்தவிதப் பாதிப்பும் ஏற்படாமல் இருக்க சுற்றுச் சூழல் துறை சார்பில் தடையில்லாச் சான்று

வழங்கப்பட்டு விட்டது. மத்திய அரசிடம் இருந்து இன்னும் மானியத்தொகை வர வேண்டியுள்ளது. மேலும் பட்டுப்பூங்கா அமைய உள்ள இடத்தை விரைவில் நானும், துறைசார்ந்த அதிகாரிகளும் ஆய்வு செய்ய உள்ளோம். விரைவில் இந்தப் பூங்காவை தமிழக முதல்வர் ஜெயலலிதா தொடக்கி வைப்பார் என்றார் அமைச்சர் எஸ். கோகுல இந்திரா. இந்த நிகழ்ச்சியில், தமிழக கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் டி.கே.எம். சின்னையா, கைத்தறி, கைத்திறன், துணிநூல், கதர்துறை அரசு முதன்மைச் செயலாளர் ஹர்மந்தர்சிங், மக்களவை உறுப்பினர் மரகதம் குமரவேல், சட்டப்பேரவை உறுப்பினர்கள் வி. சோமசுந்தரம், வாலாஜாபாத் பா. கணேசன், மாவட்ட ஊராட்சித் தலைவர் காஞ்சி பன்னீர்செல்வம், நகர்மன்றத் தலைவர் மைதிலி திருநாவுக்கரசு, கைத்தறித் துறை கூடுதல் இயக்குநர் கர்ணன், கோ-ஆப்டெக்ஸ் துணைத் தலைவர் ஜெயந்தி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## உத்தரமேரூரில் பலத்த மழை

உத்தரமேரூரில் புதன்கிழமை ஒன்றரை மணி நேரம் பலத்த மழை பெய்தது.

உத்தரமேரூர், சுற்றுவட்டாரப் பகுதிகளில் புதன்கிழமை காலை முதல் வானம் மப்பும் மந்தாரமுமாகக் காணப்பட்டது.

இந்நிலையில் மதியம் 12 மணியளவில் பலத்த மழை பெய்தது. தொடர்ந்து 1.35 மணி வரை இடைவிடாமல் பெய்த பலத்த மழையால் சாலைகளில் மழைநீர் ஆறாகப் பெருக்கெடுத்து ஓடியது. தாழ்வான பகுதிகள் தண்ணீர் குளம் போல் தேங்கியது.

இந்த மழையால் பொது மக்களும், விவசாயிகளும் மகிழ்ச்சி அடைந்தனர்.

தினகரன்

## டெல்டா மாவட்டங்களில் கனமழை : மேட்டூர் அணையின் நீர்மட்டம் 70 அடியை தாண்டியது




மேட்டூர்: மேட்டூர் அணைக்கு நேற்றுமுன்தினம் வினாடிக்கு 19,195 கனஅடியாக இருந்த நீர்வரத்து, நேற்று காலை 19,111 கனஅடியாக சரிந்தது. அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்திற்கு வினாடிக்கு

13,000 கனஅடி வீதமும், கிழக்கு, மேற்கு கால்வாய் பாசனத்திற்கு வினாடிக்கு 500 கனஅடி வீதமும் தண்ணீர் திறக்கப்பட்டு வந்தநிலையில், டெல்டா மாவட்டங்களில் கடந்த சில தினங்களாக பரவலாக மழை பெய்து வருவதால் நேற்று முன்தினம் மாலை 6 மணி முதல் டெல்டா பாசனத்திற்கு நீர்திறப்பு வினாடிக்கு 10,000 கனஅடியாக குறைக்கப்பட்டது.

அதேநேரம் கிழக்கு, மேற்கு கால்வாய் பாசனத்திற்கான நீர்திறப்பு வினாடிக்கு 600 கனஅடியாக அதிகரிக்கப்பட்டது. தற்போது, அணையில் இருந்து வினாடிக்கு 10,600 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. நீர்திறப்பை விட வரத்து அதிகளவில் உள்ளதால், நேற்று முன்தின் காலை 69.71 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம் நேற்று காலை 70.40 அடியாக உயர்ந்துள்ளது. நீர் இருப்பு 33.04 டிஎம்சி. ஒகேனக்கல் காவிரியாற்றில் நேற்று முன்தினம் வினாடிக்கு 19,500 கனஅடியாக இருந்த நீர்வரத்து நேற்று வினாடிக்கு 15,000 கனஅடியாக குறைந்தது. இதனால் கடந்த 4 நாட்களாக மெயின் அருவியில் குளிக்க விதிக்கப்பட்டிருந்த தடை, நேற்று நண்பகல் 12.15 மணியளவில் நீக்கப்பட்டது.

**நெல்லுக்கு புதிய கொள்முதல் விலை அறிவிப்பு : சாதாரண ரகம் ரூ.1,460 சன்ன ரகம் ரூ.1,520 : ஜெயலலிதா அறிக்கை**




சென்னை: தமிழக அரசு நெல் கொள்முதலுக்கு புதிய விலையை அறிவித்துள்ளது. அதன்படி சாதாரண நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.1,460ம், சன்ன ரக நெல்லுக்கு ரூ.1,520 நிர்ணயித்துள்ளதாகவும், இன்று முதல் இது நடைமுறைப்படுத்தப்படும் என்றும் ஜெயலலிதா அறிவித்துள்ளார். இதுகுறித்து முதல்வர் ஜெயலலிதா நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை: நடப்பு காரிப் பருவத்தில் விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யப்படும் நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதார விலையை மத்திய அரசு சமீபத்தில் அறிவித்துள்ளது. விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு, சாதாரண நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள 1,410 ரூபாயுடன் கூடுதலாக தமிழக அரசின் சார்பில் 50 ரூபாய் சேர்த்து ரூ.1460ம், சன்ன ரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள 1,450 ரூபாயுடன் கூடுதலாக 70 ரூபாய் ே◌சர்த்து ரூ.1,520ம் வழங்க உத்தரவிட்டுள்ளேன். இந்த புதிய கொள்முதல் விலை அக்.1 (இன்று) முதல் நடைமுறைப்படுத்தப்படும்.

பருப்பு வகைகள், சமையல் எண்ணெய் விலை வெளிச்சந்தையில் அதிகமாக உள்ளதால், நியாய விலை கடைகளில் துவரம் பருப்பு,

உளுத்தம் பருப்பு ஆகியவை கிலோ ரூ.30க்கும், ஒரு லிட்டர் பாமாயில் ரூ.25க்கும் செப்.30வரை வழங்க உத்தரவிடப்பட்டது. ஏழை, எளிய, நடுத்தர மக்களின் நலன் கருதி, மேலும் ஓராண்டுக்கு அதாவது 30.9.2016 வரை நீட்டிக்க உத்தரவிட்டுள்ளேன். இதன்படி ஒரு கிலோ துவரம் பருப்பு மற்றும் உளுத்தம் பருப்பு தலா ரூ.30க்கும், ஒரு லிட்டர் பாமாயில் ரூ.25க்கும் தொடர்ந்து வழங்கப்படும். இதன்மூலம் தமிழக அரசுக்கு ஆண்டிற்கு ரூ.2 ஆயிரம் கோடி செலவு ஏற்படும். இவ்வாறு ஜெயலலிதா அறிக்கையில் கூறியுள்ளார்.

**தேயிலை, காபி கண்காட்சி**




மும்பை: தேயிலை மற்றும் காபி உற்பத்தி துறைக்கு கூடுதல் வர்த்தக வாய்ப்பை ஏற்படுத்தும் வகையில் உலக அளவிலான தேயிலை மற்றும் காபி கண்காட்சி மும்பையில் இன்று தொடங்கி 3ம் தேதி வரை நடைபெறுகிறது. வர்த்தக வாய்ப்புகளை மட்டுமின்றி தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள் போன்றவற்றையும் பகிர்ந்து கொள்ள களம் அமைத்து தரும். இதில் 6 நாடுகளில் இருந்து பங்கேற்கின்றனர்.

**பொள்ளாச்சி சந்தைக்கு மாடு வரத்து குறைவு விற்பனை மந்தத்தால் குறைந்த விலைக்கு விற்றது**

பொள்ளாச்சி, : பொள்ளாச்சியில் நேற்று நடந்த சந்தையில் மாடு வரத்து வழக்கத்தைவிட குறைவாக இருந்தது. மாடுகளின் வரத்து குறைவால் விற்பனை மந்தமாக இருந்தது. மேலும் மாடுகள் குறைந்த விலைக்கு விற்பனை போனதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

பொள்ளாச்சி மாட்டு சந்தைக்கு தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும், ஆந்திரா, கர்நாடகா உள்ளிட்ட வெளிமாநிலங்களில் இருந்து வியபாரிகள் வந்து மாடுகள் வாங்கி செல்கின்றனர். வாரத்தில் செவ்வாய் மற்றும் வியாழக்கிழமை ஆகிய இரண்டு நாட்கள் நடக்கும் சந்தையில் பசுமாடு, காளைமாடு, எருமை போன்ற ரக மாடுகள் விற்பனைக்காக கொண்டுவரப்படுகிறது. இங்கு கொண்டுவரப்படும் மாடுகள் பெரும்பாலும் அருகே உள்ள கேரள மாநில வியாபாரிள் மற்றும் சுற்றுவட்டார கிராம பகுதியினர் குறிப்பிட்ட விலையை நிர்ணயம் செய்து வாங்கி செல்கின்றனர். பொள்ளாச்சி சந்தைக்கு, கடந்த ஒரு மாதத்திற்கும் மேலாக மாடுகள் வரத்து ஓரளவு இருந்தது. சுமார் 2,500 முதல் 3,000 மாடுகள் விற்பனைக்காக கொண்டு வரப்பட்டன. மேலும், கடந்த வாரத்தில் பக்ரீத் பண்டிகை என்பதால், மாடு விற்பனை விறுவிறுப்புடன் நடைபெற்றது. மேலும் மாடுகள் கூடுதல் விலைக்கு வியாபாரிகள் வாங்கி சென்றனர். ஆனால் நேற்று நடந்த சந்தையில் வெளிமாநிலங்களில் இருந்தும் சுற்றுவட்டார பகுதிகளில் இருந்தும் மாடுகள் வரத்து மிக குறைவாக இருந்தது. சுமார் 1000 முதல் 1,500 வரையிலான மாடுகளே விற்பனைக்காக கொண்டுவரப்பட்டிருந்தன. வழக்கத்தைவிட மாடு வரத்து குறைவாக இருந்தாலும், கேரள வியாபாரிகள் மற்றும் சுற்றுவட்டார பகுதி வியாபாரிகள் வருகை குறைவால் விற்பனை மந்தமாக காணப்பட்டது. இதன் காரணமாக, விவசாயிகள் தங்கள் கொண்டுவந்த மாடுகளை குறைந்த விலைக்கு விற்பனை செய்தனர். கடந்த வாரம் ஒரு காளை மாடு ரூ.35,000 வரைக்கு

விற்பனையானது. ஆனால் நேற்று ஒரு மாடு ரூ.17,000 முதல் அதிகபட்சமாக ரூ.20,000 விலைபோனது.

## நெல்லுக்கான ஆதார விலை நிர்ணயம்_: தமிழக விவசாயிகள் கடும் அதிருப்தி



கோப்புப் படம்

நெல்லுக்கான ஆதார விலையை நிர்ணயம் செய்து மத்திய, மாநில அரசுகள் வெளியிட்டுள்ள அறிவிப்புகள் குறித்து விவசாயிகள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

சாதாரண ரக நெல்லுக்கு குவிண்டால் ரூ.1,360, சன்ன ரக நெல்லுக்கு ரூ.1,400 என கடந்த ஆண்டு மத்திய அரசு ஆதார விலை நிர்ணயம் செய்திருந்தது. கடந்த ஜூன் மாதம் இந்த விலையில் ரூ.50 உயர்த்தி மத்திய அரசு அறிவித்தது.

இந்நிலையில் மத்திய அரசு நிர்ணயித்த விலையுடன் சேர்த்து சாதாரண ரக நெல்லுக்கு ரூ.50 மற் றும் சன்ன ரக நெல்லுக்கு ரூ.70 கூடுதலாக வழங்கப்படும் என தமிழக முதல்வர் ஜெயலலிதா நேற்று அறிவித்தார். இதன்படி சாதாரண ரக நெல்லுக்கு குவிண் டால் ஒன்றுக்கு ரூ.1,460

மற்றும் சன்ன ரக நெல்லுக்கு ரூ.1,520 என தமிழக விவசாயிகளுக்கு விற்பனை விலை கிடைக்கும்.

ஆனால் இந்த விலை நிர்ணயம் விவசாயிகளுக்கு திருப்தி தர வில்லை. விதை நெல் செலவு, நாற்று விடுதல், நாற்று பறிப்பு, உழவு, நடவு நடுதல், உரம், பூச்சிக்கொல்லி, களை எடுத்தல், அறுவடை என நெல் சாகுபடிக்கு பெரும் செலவா கிறது. இயல்பான மழை பொழிந்து, தேவையான தண்ணீர் கிடைக்கும் ஆண்டு களில் ஒரு ஏக்கர் நெல் சாகுபடிக்கு குறைந்தபட்சம் ரூ.20 ஆயிரம் செலவாகிறது. வறட்சி அல்லது கடும் மழையால் வெள்ளம் ஏற்படும் ஆண்டுகளில் இந்த செலவு மேலும் அதிகரிக்கும்.

மேலும், நிலத்தின் உரிமை யாளரான விவசாயியோ அல்லது விவசாயத் தொழிலாளி ஒருவரோ அன்றாட பராமரிப்பு பணிகளுக்காக தினமும் குறைந்தது 2 மணி நேரமாவது வயலில் இருந்தாக வேண்டும். இந்த மனித உழைப்புக் கான கூலியையும் சேர்க்கும்போது செலவுத் தொகை ஏக்கருக்கு ரூ.30 ஆயிரத்தை தாண்டிவிடும்.இந்நிலையில் நன்றாக விளைச்சல் இருக்கும் ஆண்டுகளில் கூட ஏக்கர் ஒன்றுக்கு சுமார் 20 குவிண்டால் நெல் மகசூல் கிடைப்பதே பெரிது என்கின்றனர் விவசாயிகள். தற்போ தைய விலை நிலவரப்படி இந்த மகசூலுக்கு சுமார் ரூ.30 ஆயிரம் மட் டுமே விவசாயிகளுக்கு கிடைக்கும்.

ஆக, நன்றாக விளைச்சல் இருக்கும் ஆண்டுகளில் கூட நெல்லுக் கான உற்பத்தி விலை மட்டுமே, விற்பனை விலையாக கிடைக்கும் நிலை உள்ளதாக விவசாயிகள் வேதனை தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து தமிழ்நாடு விவசாயிகள் சங்க தலைவரும், மார்க்சிஸ்ட் கட்சியின் எம்.எல்.ஏ.வுமான கே.பாலகிருஷ்ணன் கூறியதாவது:

நெல் உள்ளிட்ட வேளாண் விளைபொருட்களின் கொள்முதல் விலையை உயர்த்துவது பற்றி சட்டப்பேரவையில் விவாதிக்க வேண்டும் என வலியுறுத்தினோம். இந்நிலையில் சட்டப்பேரவை கூட்டத் தொடர் நிறைவடைந்த மறுநாள் நெல் விலை நிர்ண யம் குறித்த அறிவிப்பை

அரசு வெளி யிட்டுள்ளது. இது சரியல்ல. நெல் லுக்கு குறைந்தபட்சம் குவிண் டாலுக்கு ரூ.2 ஆயிரமாவது விலை தர வேண்டும். இல்லையெனில் உணவுப் பாதுகாப்பு என்பதே கேள்விக்குரியதாகி விடும்.

இவ்வாறு பாலகிருஷ்ணன் கூறினார்.

இது குறித்து தமிழ்நாடு காவிரி நீர்ப்பாசன விளைபொருட்கள் விவசாயிகள் நல உரிமை பாதுகாப்புச் சங்கத்தின் பொதுச் செயலாளர் மன்னார்குடி எஸ்.ரங்கநாதன் கூறியதாவது:_

சந்தையில் நுகர்வோருக்கு விற்கப்படும் அரிசியின் விலை மிகக் கடுமையாக இருக்கும் நிலையில், அதனை உற்பத்தி செய்யும் விவசாயிக்கு உற்பத்தி செலவுக்கான தொகைகூட கிடைக் காத நிலை தொடர்கிறது. குவிண் டாலுக்கு குறைந்தபட்சம் ரூ.2 ஆயிர மாவது விலை வழங்கினால்தான் விவசாயிகளுக்கு ஓரளவாவது நியாயமான விலை கிடைக்கும்.

இவ்வாறு ரங்கநாதன் தெரிவித்தார்.

தமிழக காவிரி விவசாயிகள் சங்கத் தலைவர் பி.ஆர்.பாண்டியன் கூறும்போது, "பேராசிரியர் எம்.எஸ். சுவாமிநாதன் குழு பரிந்துரைப்படி நெல்லுக்கான ஆதார விலையை மத்திய அரசு நிர்ணயிக்க வேண்டும். இது தொடர்பான தமது தேர்தல் வாக்குறுதியை மத்திய பாஜக அரசு நிறைவேற்ற வேண்டும்" என்றார்.

## அறுவடை தொடங்கிய வேளையில்_ தொடர் மழையால் நெற்பயிர் சேதம்_: கன்னியாகுமரி விவசாயிகள் கலக்கம்



துவரங்காடு பகுதியில் மழையால் சேதமடைந்துள்ள நெற்பயிர்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. கன்னிப்பூ அறுவடை நடந்து வந்த நிலையில், மழையால் வயல்களில் தண்ணீர் தேங்கி பயிர்கள் சேதமடைந்துள்ளன. இதனால் விவசாயிகள் கலக்கத்தில் உள் ளனர்.

நெற் பயிருக்கு கட்டுபடியான விலையின்மை, அரசு கொள்முதல் செய்யாதது உள்ளிட்ட பல்வேறு சிக்கல்களுக்கு மத்தியில், கன்னியாகுமரி மாவட்டத்தில் விவசாயிகள் நெல் சாகுபடி செய்கின்றனர். வேளாண்மைத் துறை புள்ளி விபரங்களின்படி நடப்பாண்டு கன்னிப்பூ பருவத்தில் 8,350 ஹெக்டேர் பரப்பில் நெல் பயிராகியுள்ளது. கடந்த ஒரு மாதமாக 50 சதவீத அறுவடை பணிகள் முடிவடைந்துள்ளன.

திடீரென ஒரு வாரமாக மழை பெய்து வருகிறது. தொடர் மழையால் நாஞ்சில் நாட்டு சுற்றுவட்டாரப் பகுதிகளில் நெல் வயல்களை தண்ணீர் சூழ்ந்துள்ளது. பொதி பருவத்தில் இருந்த பயிர்கள் சேதமாகி மகசூல் இழப்பு ஏற்படும் சூழல் நிலவுகிறது.

## இழப்பீடு வேண்டும்

முன்னோடி விவசாயி செண்பக சேகரன் கூறும்போது, ‘உரக்கடை, கூட்டுறவு சங்கங்களில் கடன் வாங்கி விவசாயம் செய்து வருகிறோம். நடவு செய்த பருவத்தில் தண்ணீருக்கு தவம் இருந்தோம். இப்போது அறுவடை நேரத்தில் மழை பெய்து அதே தண்ணீரால் பாதிக்கப்பட்டு நிற்கி றோம்.

துவரங்காடு சுற்றுவட்டாரப் பகுதியில் அறுவடை பணிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. வயல்கள் சகதிக் காடாய் மாறியுள்ளன. அறுவடை செய்த நெல் மணிகளை டிராக்டர் மூலம் கொண்டு செல்ல முடியாத நிலை உள்ளது. இதனால் அறுவடை இயந்திரத்தில் வைத்தே வயலில் இருந்து சாலை வரை கொண்டு வர வேண்டியுள்ளது. அறுவடை இயந்திரத்தின் கூலியாக ஒரு மணி நேரத்துக்கு ரூ.2,000 கொடுக்கிறோம். மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டு உரிய இழப்பீடு வழங்க ஆட்சியர் நடவடிக்கை எடுக்க வேண்டும்’ என்றார் அவர்.

## இயற்கை உரமாகும் மயான மலர்கள்



மயானங்களுக்கு வரும் சடலங்களுடன் வரும் மலர்களை களையாமல் அதை இயற்கை உரமாக்கும் முயற்சியில் சென்னையைச் சேர்ந்த தன்னர்வ அமைப்பு ஒன்று வெற்றிகண்டுள்ளது.

மயானங்களுக்கு வரும் சடலங்களுடன் வரும் மலர்களை தூக்கி எறியாமல் அதை இயற்கை உரமாக்கும் முயற்சியில் சென்னையைச் சேர்ந்த தன்னர்வ அமைப்பு ஒன்று வெற்றிகண்டுள்ளது.

சென்னை அண்ணா நகரிலுள்ள வேலங்காடு மின் மயானத்துக்கு வரும் சடலங்களுடன் நாளொன்றுக்கு சுமார் 300 கிலோ அளவுக்கு மலர்களும்

வருகின்றன, அதை உரமாக்கி அங்குள்ள மரங்கள் மற்றும் பூச்செடிகளுக்கு இடுவதாக இந்திய சமுதாய நலவாழ்வு நிறுவனம் எனும் தன்னார்வ அமைப்பின் இயக்குநர் ஹரிஹரன் பிபிசி தமிழோசையிடம் தெரிவித்தார்.

இவ்வகையிலான முயற்சி இந்தியாவிலேயே முதல் முறையாக முன்னெடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

சுமார் நான்கு ஏக்கர் பரப்பளவு கொண்ட வேலங்காடு மின் மயானத்தை தூய்மையாக வைத்திருக்கவும் இந்த முயற்சி உதவுகிறது எனவும் ஹரிஹரன் தெரிவித்தார்.

சடலங்களுடன் வரும் மலர்களால் பல ஆண்டுகளாக மிகவும் அசுத்தமாகவும் சுகாதாரக் கேடாவும் இருந்த நிலை இப்படியான முயற்சியின் மூலம் மாற்றம் கண்டுள்ளது என்றும், அடுத்த கட்டமாக இதை வேறு பல மயானங்களுக்கு விரிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறுகிறார்.

சென்னை நகரில் மட்டுமே நாளொன்றுக்கு சுமார் ஆறாயிரம் கிலோ அளவுக்கு சடலங்களுடன் மலர்கள் வருவதாக கணக்கிடப்பட்டுள்ளது.

**தினமணி**

**நெல்லுக்கு புதிய கொள்முதல் விலை: முதல்வர் ஜெயலலிதா அறிவிப்பு**

சென்னை: வெளிச் சந்தையில் பருப்பு வகைகள் மற்றும் சமையல் எண்ணெய் ஆகியவற்றின் விலை உயர் அளவில் உள்ளதால், ஏழை, எளிய, நடுத்தர மக்களின் நலன் கருதி நியாய விலைக் கடைகளில், துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு மற்றும் பாமாயில் வழங்கிடும் இந்த சிறப்பு பொது விநியோகத் திட்டத்தினை மேலும் ஓராண்டுக்கு நீட்டிக்க

முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து முதல்வர் ஜெயலலிதா வெளியிட்ட அறிவிப்பு வருமாறு:

மேற்கொண்டுள்ள உழவர் பெருமக்களின் வாழ்வு வளம் பெற பல்வேறு நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு தொடர்ந்து எடுத்து வருகிறது. விவசாய இடுபொருட்களை உரிய காலத்தே வழங்குதல், தரமான விதைகளை உற்பத்தி செய்து வழங்குதல், நுண்ணீர் பாசனத் திட்டம் போன்ற பல்வேறு முன்னோடித் திட்டங்களுக்குத் தேவையான மானியம் வழங்குதல், வேளாண் தொழிலாளர்களின் பற்றாக்குறையை எதிர்கொள்ளும் வகையில் வேளாண் இயந்திரமயமாக்கும் திட்டத்தை செயல்படுத்துதல், புதிய உத்திகளையும் தொழில்நுட்பங்களையும் விவசாயிகள் கடைபிடிக்கும் வகையிலான நடவடிக்கைகளை எடுத்தல் என பல்வேறு உத்திகளை கடைபிடிப்பதன் காரணமாக உணவு தானிய உற்பத்தியில் ஆண்டு தோறும் புதிய சாதனைகளை தமிழ்நாடு படைத்து வருகிறது.

வேளாண் உற்பத்தியை பெருக்குவதோடு விளை பொருட்களுக்கு உரிய விலை வழங்கப்பட்டால் தான் வேளாண் பெருமக்களின் வாழ்வு வளம் பெறும். இந்த அடிப்படையிலேயே, மத்திய அரசு நிர்ணயிக்கும் நெல் கொள்முதல் விலையுடன் கூடுதலாக ஊக்கத் தொகையை எனது தலைமையிலான அரசு ஒவ்வொரு ஆண்டும் வழங்கி வருகிறது. நடப்பு காரிஃப் பருவத்தில் விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யப்படும் நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதார விலையை மத்திய அரசு சமீபத்தில் அறிவித்துள்ளது. சன்ன ரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு 1,450 ரூபாய் எனவும், சாதாரண ரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு 1,410 ரூபாய் எனவும் மத்திய அரசு நெல்லுக்கான ஆதார விலையை நிர்ணயித்துள்ளது.

விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு சாதாரண நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள 1,410 ரூபாயுடன் கூடுதலாக தமிழக அரசின் சார்பில் 50 ரூபாய் வழங்கவும்; சன்ன ரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள 1,450 ரூபாயுடன் கூடுதலாக தமிழக அரசின்

சார்பில் 70 ரூபாய் வழங்கவும் நான் உத்தரவிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன்படி சாதாரண நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு 1,460 ரூபாயும், சன்ன ரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு 1,520 ரூபாயும் வழங்கப்படும். நெல்லுக்கான இந்த புதிய கொள்முதல் விலை 1.10.2015 முதல் நடைமுறைப்படுத்தப்படும்.

பருப்பு வகைகள் மற்றும் சமையல் எண்ணெய் ஆகியவற்றின் விலை வெளிச்சந்தையில் அதிகமாக உள்ள காரணத்தால், துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு மற்றும் பாமாயில் ஆகியவை மிகக் குறைந்த விலையில் குடும்ப அட்டைதாரர்களுக்கு நியாய விலைக் கடைகள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன. துவரம் பருப்பு மற்றும் உளுத்தம் பருப்பு ஆகியவை கிலோ 30 ரூபாய்க்கும், ஒரு லிட்டர் பாமாயில் 25 ரூபாய்க்கும் வழங்கப்படுகிறது. பொது விநியோகத் திட்டத்தின் கீழ் துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு மற்றும் பாமாயில் ஆகியவை 30.9.2015 வரை வழங்கிட நான் கடந்த ஆண்டு உத்தரவிட்டிருந்தேன். வெளிச் சந்தையில் பருப்பு வகைகள் மற்றும் சமையல் எண்ணெய் ஆகியவற்றின் விலை உயர் அளவில் உள்ளதால், ஏழை, எளிய, நடுத்தர மக்களின் நலன் கருதி நியாய விலைக் கடைகளில், துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு மற்றும் பாமாயில் வழங்கிடும் இந்த சிறப்பு பொது விநியோகத் திட்டத்தினை மேலும் ஓராண்டுக்கு அதாவது 30.9.2016 வரை நீட்டிக்க நான் உத்தரவிட்டுள்ளேன். இதன் படி ஒரு கிலோ துவரம் பருப்பு மற்றும் உளுத்தம் பருப்பு தலா 30 ரூபாய்க்கும், ஒரு லிட்டர் பாமாயில் 25 ரூபாய்க்கும் தொடர்ந்து வழங்கப்படும். நியாய விலைக் கடைகள் மூலம் குறைந்த விலையில் துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு மற்றும் பாமாயில் வழங்கிடும் இத்திட்டத்திற்கென தமிழக அரசுக்கு ஆண்டிற்கு 2,000 கோடி ரூபாய் செலவு ஏற்படும்.இவ்வாறு அவர் கூறியுள்ளார்,

மாலைமலர்
www.maalaimalar.com
News.Entertainment.Unlimited...

## கேரளாவில் 4 நாட்களுக்கு கனமழை எச்சரிக்கை: பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்ய கலெக்டர்களுக்கு உத்தரவு

திருவனந்தபுரம், அக்.1–

கேரள மாநிலத்தில் வட மாவட்டங்களான பாலக்காடு, எர்ணாகுளம், மலப்புரம் போன்ற பகுதிகளில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. அதேசமயம் தென்மாவட்டங்களான திருவனந்தபுரம், பத்தனம் திட்டா, கொல்லம் மாவட்டங்களில் லேசான மழை பெய்து வருகிறது.

இந்தநிலையில் கேரள மாநிலம் முழுவதும் இன்று முதல் 4–ந் தேதி வரை 4 நாட்களுக்கு கனமழை பெய்யும் என்று வானிலை மையம் எச்சரித்துள்ளது. பலத்த சூறாவளி காற்றுடன் இந்த மழை பெய்யும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

கடல் கொந்தளிப்புடன் காணப்படும் என்பதால் இன்று முதல் 4 நாட்களுக்கு மீனவர்கள் கடலுக்கு செல்ல வேண்டாம் என்று எச்சரிக்கப்பட்டு உள்ளனர். மேலும் மீனவர்கள் கடலுக்கு செல்லாமல் இருப்பதை கண்காணிக்க கடலோர பாதுகாப்பு படை போலீசார் படகுகள் மூலம் ரோந்து பணியில் ஈடுபட்டு உள்ளனர்.

மாநிலம் முழுவதும் மழை முன்எச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி அந்தந்த மாவட்ட கலெக்டர்களுக்கு கேரள அரசு உத்தரவிட்டு உள்ளது. அதன்படி கலெக்டர்கள் மழை முன்எச்சரிக்கை நடவடிக்கைகளில் இறங்கி உள்ளனர்.

## டெல்டா பாசனத்திற்காக மேட்டூர் அணையில் நீர் திறப்பு குறைப்பு

மேட்டூர், செப். 30-

காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் மழை காரணமாக கர்நாடக மாநிலத்தில் உள்ள கபினி மற்றும் கிருஷ்ணராஜசாகர் அணைகளில் இருந்து, காவிரி ஆற்றில் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இதேபோல் தமிழகத்தில் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளிலும் தொடர்ந்து மழை பெய்து வருவதால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து வருகிறது.இதனால், மேட்டூர் அணையின் நீர்மட்டம் மளமளவென உயர்ந்து வருகிறது. நேற்று காலை அணைக்கு விநாடிக்கு 19 ஆயிரத்து 195 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. இன்று காலை விநாடிக்கு 19 ஆயிரத்து 117 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையின் நீர்மட்டம் 69.71 அடியில் இருந்து 70.41 அடியாக உயர்ந்துள்ளது.

மேட்டூர் அணையின் நீர்மட்டம் 70 அடியை தாண்டியதால் நீர்தேக்க பகுதியான பண்ணவாடி பரிசல்துறையில் தண்ணீருக்கு வெளியே தெரிந்த ஜலகண்டேஸ்வரர் ஆலயத்தின் நந்திசிலை மீண்டும் நீரில் மூழ்கியது.

மேட்டூர் அணையின் இருந்து காவிரி டெல்டா பாசனத்திற்காக விநாடிக்கு 13 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீரும், கிழக்கு, மேற்கு கால்வாய் பாசனத்திற்காக விநாடிக்கு 500 கன அடி வீதம் தண்ணீரும் திறந்து விடப்பட்டது. தற்போது காவிரி டெல்டா மாவட்டங்களில் மழை பெய்து வருவதால், அங்கு தண்ணீரின் தேவை குறைந்துள்ளது.

இதையடுத்து அணையில் இருந்து டெல்டா பாசனத்திற்கு தண்ணீர் திறப்பு குறைக்கப்பட்டுள்ளது. இன்று காலை முதல் விநாடிக்கு 10 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

இதேபோல் கால்வாய் பாசனத்திற்காக விநாடிக்கு 500 கன அடியில் இருந்து 600 கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. நீர் திறப்பை விட நீர்வரத்து அதிகமாக உள்ளதால் அணையின் நீர்மட்டம் மேலும் உயர்வதற்கான வாய்ப்பு உருவாகி உள்ளது.

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் 20 ஆயிரம் கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருப் பதால் மெயின் அருவி, சினிபால்ஸ், ஐந்தருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்துக் கொட்டுகிறது.

இன்று 5-வது நாளாக சுற்றுலா பயணிகளில் பாதுகாப்பு கருதி ஒகேனக்கல் அருவிகளில் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## அரியலூர் மாவட்டத்தில் முந்திரி தொழிற்சாலை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை



அரியலூர் மாவட்டத்தில் முந்திரி தொழிற்சாலை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறைதீர்க்கும் நாள் கூட்டம்அரியலூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நேற்று நடந்தது. கூட்டத்திற்கு மாவட்ட கலெக்டர் சரவணவேல்ராஜ் தலைமை தாங்கி விவசாயிகளிடம் குறைகளை கேட்டறிந்தார். அதன் பின்னர் இது குறித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

வறட்சி மாவட்டமாகஅப்போது தமிழக விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் உலகநாதன் பேசுகையில், அரியலூர் மாவட்டத்தில் போதிய

மழை இல்லாததால் மானாவாரி பயிர்கள் நடப்படவில்லை. அதற்கு மாற்றாக பயிரிடப்பட்ட சோளம், கடலை உள்ளிட்ட பயிர்களும் வறட்சியால் கருகிவிட்டன. எனவே அரியலூர் மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து நடவடிக்கை எடுக்குமாறு தமிழக அரசிற்கு கலெக்டர் பரிந்துரை செய்ய வேண்டும். மேலும் தமிழக நதிகளை இணைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். மருதையாறு அருகே உள்ள ஓடைகள் கணக்கிடப்பட்டு தூர்வாரி அதனை அருகிலுள்ள ஏரிகளுக்கு திருப்பி விட வேண்டும். இதனால் நிலத்தடி நீர்மட்டம் உயரும். மேலும் அந்தப்பகுதியில் வசிக்கும் கிராம மக்களுக்கு குடிநீர் தட்டுப்பாடின்றி கிடைக்கும். முதியோர் உதவித் தொகை வழங்கப்பட்டதில் முறைகேடுகள் நடந்துள்ளன. எனவே முதியோர் உதவி தொகை வாங்குவோருக்கு தனிக் கையேடு கொடுக்கப்பட்டு அதில் குறிக்க பட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறினார். கரும்பு நிலுவை தொகைகரும்பு விவசாயிகள் சங்க தலைவர் வாரணவாசி ராஜேந்திரன் பேசுகையில், விவசாயிகளுக்கு சர்க்கரை ஆலை நிர்வாகம் வழங்க வேண்டிய நிலுவை தொகையினை விரைந்து வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையெனில் விவசாயிகள் அனைவரும் ஒன்று திரண்டு முற்றுகை போராட்டம் நடத்துவோம் என்று கூறினார்.

முந்திரி தொழிற்சாலைதமிழக ஏரி மற்றும் ஆற்று பாசன விவசாயிகள் சங்க மாநில தலைவர் விசுவநாதன் பேசுகையில், அரியலூர் மாவட்டத்தில் சுக்கிரன் ஏரி மூலமாக பொன்னாற்று பாசனம் மூலம் 30 ஆயிரம் ஏக்கரில் சம்பா சாகுபடி தொடங்கப்பட்டுள்ளது. இந்த விவசாயிகளுக்கு கடைமடை பகுதி வரை காவிரி தண்ணீர் கிடைக்க வழி வகை செய்ய வேண்டும். அரியலூர் மாவட்டத்தில் ஜெயங்கொண்டம், செந்துறை, ஆண்டிமடம் ஒன்றியங்களில் முந்திரி விவசாயிகளை காக்கும் வகையில் முந்திரி கொட்டை தொழிற்சாலை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறினார். அரியலூர் மாவட்டத்தில் உள்ள

அனைத்து ஒன்றியங்களிலும் பொக்ளின் எந்திரம் மூலம் சீமை கருவேல மரங்களை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். தேசிய ஊரக வேலைவாய்ப்புதிட்ட பணியாளர்களை வைத்து நீர் நிலைகளில் உள்ள வரத்து வாய்க்கால்களை தூர்வார வேண்டும் என்றார்.

தடுப்பணை

தேசிய-தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்க மாநில தலைவர் அய்யாக்கண்ணு பேசுகையில், வடகிழக்கு பருவமழை காலங்களில் காவிரி கொள்ளிடத்தில் வரும் வெள்ளநீரை ஆங்காங்கே தடுப்பணை கட்டி தேக்கி நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்த வேண்டும். அய்யாறு-அரியலூர் வரை காவிரி நீரை கொண்டு வர புதியவாய்க்கால் வெட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறினார். இக்கூட்டத்தில், வேளாண் இணை இயக்குனர் பன்னீர்செல்வம், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் செந்தில், இணை பதிவாளர் (கூட்டுறவு சங்கங்கள்) பாபு மற்றும் அலுவலர்கள், ஏராளமான விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

## கொள்முதல் நிலையம் திறக்காததால் 2 ஆயிரம் மூட்டை நெல் தேக்கம் விவசாயிகள் கவலை



பொள்ளாச்சி,

நெல் கொள்முதல் நிலையம் திறக்காததால் ஆனைமலை பகுதியில் 2 ஆயிரம் மூட்டை நெல் தேக்கம் அடைந்து உள்ளது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

<u>நெல் சாகுபடி</u>

கோவை மாவட்டத்தில் ஆனைமலை பகுதியில் நெல் அதிகளவு சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. கடந்த 10 ஆண்டுகளுக்கு முன் 8 ஆயிரத்து 600 ஏக்கர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்யப்பட்டது. நெல்லுக்கு உரிய விலை கிடைக்காததால் விவசாயிகள் நெல் சாகுபடியை தவிர்த்து, தென்னை, தக்காளி, வாழை போன்ற மாற்று பயிர்களை சாகுபடி செய்ய தொடங்கினார்கள்.

இதனால் நெல் சாகுபடி பரப்பளவு குறைந்து, ஆனைமலை பகுதியில் தற்போது 2 ஆயிரத்து 200 ஏக்கர் பரப்பளவில் தான் நெல் சாகுபடி செய்யப்பட்டு உள்ளது. நெல் விவசாயத்தை நம்பி சுமார் ஆயிரம் குடும்பத்தினர் உள்ளனர்.

<u>போதிய விலை கிடைப்பதில்லை</u>

தற்போது பழைய ஆயக்கட்டு பாசனத்தில் சம்பா நெல் அறுவடை நடைபெற்று வருகிறது. ஒரு ஏக்கர் நெல் சாகுபடி செய்ய ரூ.24 ஆயிரம் செலவாகிறது. நெல் கொள்முதல் நிலையம் திறக்காததால், ஒரு ஏக்கருக்கு ரூ.20 ஆயிரம் தான் விவசாயிகளுக்கு கிடைக்கிறது.

ஒரு குவிண்டால் சாதாரண நெல்லுக்கு ரூ.1410, உயர் ரக நெல்லுக்கு ரூ.1470 அரசு விலை நிர்ணயித்து உள்ளது. இடைத்தரகர்கள் குறுக்கீடு காரணமாக ஒரு குவிண்டால் ரூ.720 தான் விலை போகிறது. இதனால் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது.

<u>நெல் மூட்டைகள் தேக்கம்</u>

விலை குறைவு காரணமாக விவசாயிகள் நெல்லை விற்பனை செய்யாமல் வைத்து உள்ளனர். சுமார் 2 ஆயிரம் மூட்டை நெல் தேக்கம் அடைந்து உள்ளது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்து உள்ளனர். நெல்லுக்கு உரிய விலை கிடைக்க ஆனைமலையில் நெல் கொள்முதல்

மையத்தை திறக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

<u>நெல் கொள்முதல் நிலையம்</u>

இதுகுறித்து விவசாயிகள் கூறியதாவது:–

ஆனைமலை பகுதி நெல் விவசாயத்திற்கு பிரசித்தி பெற்றது. நெல்லுக்கு உரிய விலை கிடைக்காததால் விவசாயிகள் நெல் சாகுபடியை தவிர்த்து, மாற்று பயிர்களை சாகுபடி செய்து வருகின்றனர். தற்போது ஆனைமலை பகுதியில் சம்பா நெல் அறுவடை நடைபெற்று வருகிறது. இடைத்தரகர்கள் ஆதிக்கம் காரணமாக நெல்லுக்கு அரசு நிர்ணயித்த விலையை விட குறைவாக கிடைக்கிறது. இதனால் நெல் சாகுபடி செய்த விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது.

இதன் காரணமாக விவசாயிகள் அறுவடை செய்த நெல்லை விற்பனை செய்யாமல், களத்தில் குவித்தும், மூட்டையாக கட்டியும் வைத்து உள்ளனர். தற்போது ஆனைமலை பகுதியில் மழை பெய்து வருவதால், நெல் சேதம் ஏற்படாமல் இருக்க தார்பாய் கொண்டு மூடி வைக்கப்பட்டு உள்ளது. ஆனைமலையில் நாளை (இன்று) நெல் கொள்முதல் மையம் திறக்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். ஆனால் அதற்கான அறிவிப்புகள் எதுவும் இன்று (நேற்று) மாலை வரை வரவில்லை. நெல் கொள்முதல் மையத்தை திறந்து விவசாயிகள் வாழ்வாதாரத்தை காப்பாற்ற வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

## திருவள்ளூரில் பலத்த மழை



திருவள்ளூர்,

திருவள்ளூர், மணவாளநகர், அரண்வாயல், வெள்ளவேடு, மணவாளநகர், ஈக்காடு, திருப்பாச்சூர், கடம்பத்தூர், மப்பேடு, பேரம்பாக்கம், திருவாலங்காடு போன்ற பகுதிகளில் நேற்று பலத்த மழை பெய்தது. இதனால் சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது.

## திருவாரூர் மாவட்டத்தில் சம்பா சாகுபடி பணிகள் கலெக்டர் மதிவாணன் ஆய்வு



திருவாரூர்,

திருவாரூர் மாவட்டத்தில் நடைபெற்று வரும் சம்பா சாகுபடி பணிகளை கலெக்டர் மதிவாணன் ஆய்வு செய்தார்.

<u>சம்பா சாகுபடி</u>

திருவாரூர் மாவட்டத்தில் தற்போது சம்பா சாகுபடி பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன. விவசாயிகள் நடவு மற்றும் களை எடுத்தல் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் நடைபெற்று வரும் சம்பா சாகுபடி பணிகளை மாவட்ட கலெக்டர் மதிவாணன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

திருவாரூர் ஓடம்போக்கி ஆறு மூலம் பாசனம் பெறும் அம்மையப்பன், இளவங்கார்குடி, இளங்குடி, காட்டூர், அகரதிருநல்லூர், பவுத்திரமாணிக்கம், பெரும்புகளூர் ஆகிய இடங்களில் 2 ஆயிரத்து 780 ஏக்கரில் சம்பா சாகுபடி செய்யப்பட்டு இருக்கிறது. இந்த இடங்களுக்கு சென்ற கலெக்டர் பயிர்களுக்கு தேவையான அளவு தண்ணீர் கிடைக்கிறதா? விவசாயிகளுக்கு தேவையான அளவு இடுபொருள்

வினியோகம் செய்யப்படுகிறதா? என்பது பற்றி ஆய்வு செய்தார். இதேபோல் மன்னார்குடி குளத்துமேடு தென்பகுதி, ரொக்ககுத்தகை, தென்கரைவயல், நன்னிலம், பனங்குடி உள்ளிட்ட இடங்களில் நடைபெறும் சம்பா சாகுபடி பணிகளையும் கலெக்டர் ஆய்வு செய்தார். இதுகுறித்து கலெக்டர் மதிவாணன் கூறியதாவது:–

<u>விதை வினியோகம்</u>

சம்பா சாகுபடிக்காக வெண்ணாற்றில் 6 ஆயிரம் கனஅடி தண்ணீர் வழங்கப்பட்டு வந்தது. தற்போது தண்ணீர் திறப்பு 9 ஆயிரம் கன அடியாக அதிகரிக்கப்பட்டு இருக்கிறது. இன்னும் சாகுபடி செய்ய வேண்டிய பரப்புக்கு தேவையான ஆடுதுறை –36 ஆடுதுறை–39 உள்ளிட்ட விதை நெல் ரகங்கள் வேளாண்மை விரிவாக்க மையங்கள் மற்றும் தனியார் விதை விற்பனை நிலையங்களில் இருப்பு வைக்கப்பட்டு விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது. இதனை விவசாயிகள் பயன்படுத்தி கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

ஆய்வின்போது பொதுப்ணித்துறை செயற்பொறியாளர் ரவிச்சந்திரன், உதவி செயற்பொறியாளர்கள் மகேந்திரன், சுப்பையன், மோகன், வேளாண்மை துறை இணை இயக்குனர் மதியழகன், செய்தி மக்கள் தொடர்பு அதிகாரி குமார் ஆகியோர் உடன் இருந்தனர்.

## தொடர் மழையால் நீர்வரத்து அதிகரிப்பு: வைகை அணையின் நீர்மட்டம் உயர்கிறது



ஆண்டிப்பட்டி,

தேனி மாவட்டத்தில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால் வைகை அணையின் நீர்மட்டம் தொடர்ந்து உயர்ந்து வருகிறது. அதிகபட்சமாக போடியில் நேற்று முன்தினம் இரவு 67 மில்லிமீட்டர் மழை பதிவாகியுள்ளது.

<u>நீர்வரத்து அதிகரிப்பு</u>

தேனி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் கடந்த 2 நாட்களாக இடியுடன் கூடிய பலத்த மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக தேனி மாவட்டத்தில் உள்ள அனைத்து அணைகளுக்கும் நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதற்கிடையே அணைகளில் இருந்து பாசனத்திற்காக தண்ணீர் திறப்பது நிறுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக அணைகளின் நீர்மட்டம் தொடர்ந்து உயர்ந்து வருகிறது.

இதன்படி கடந்த 5 நாட்களுக்கு முன்பு 40 அடியாக இருந்த வைகை அணையின் நீர்மட்டம் நேற்று 46 அடியை தாண்டியது. கடந்த ஒரு வாரத்தில் மட்டும் வைகை அணையின் நீர்மட்டம் 6 அடி உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது. மேலும் மாவட்ட பகுதிகளில் தொடர்ந்து பலத்த மழை பெய்து வருவதால் அனைத்து நீர்நிலைகளிலும் வரத்து அதிகரிக்கும் வாய்ப்பு உருவாகி உள்ளது.

தேனி மாவட்டத்தில் பல இடங்களில் நேற்று முன்தினம் இரவு முழுவதும் மழை கொட்டியது. அதிகபட்சமாக போடி பகுதியில் 67 மில்லி மீட்டர்

மழை பதிவாகி இருந்தது. இந்த மழையின் காரணமாக கொட்டக்குடி ஆற்றில் நீர்வரத்து அதிகரித்துள்ளது. அதேபோல வைகை ஆற்றிலும் நீர்வரத்து அதிகமாக இருப்பதால் அணையின் நீர்மட்டம் மேலும் உயர்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

வைகை அணை

நேற்று காலை 6 மணி நிலவரப்படி வைகை அணையின் நீர்மட்டம் 46.13 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 1,420 கனஅடி தண்ணீர் வந்த நிலையில், அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக மட்டும் வினாடிக்கு 60 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டது. இதனால் அணையின் மொத்த நீர்இருப்பு 1,525 மில்லியன் கனஅடியாக இருந்தது.

தேனி மாவட்டத்தில் நேற்று முன்தினம் பெய்த மழை அளவு மில்லி மீட்டரில் வருமாறு:–

தேக்கடி–48, தேனி மற்றும் ஆண்டிப்பட்டி–6.2, பெரியகுளம்–16.2, போடி–67, வீரபாண்டி–64, கூடலூர்–19.5, சண்முகாநதி–8, உத்தமபாளையம்–16.2, மஞ்சளாறு–49, சோத்துப்பாறை–9, வைகைஅணை–3.8, மயிலாடும்பாறை–55.4.

## விவசாய பயிர்களை காட்டு யானைகள் நாசம் செய்வதை தடுக்க வேண்டும்: விவசாயிகள் கோரிக்கை



உத்தமபாளையம்,

தேவாரம்–கோம்பை பகுதியில் விவசாய பயிர்களை காட்டு யானைகள் நாசம் செய்வதை வனத்துறையினர் தடுக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

<u>காட்டு யானைகள்</u>

தேனி மாவட்டத்தில் ஏராளமான மரங்களுடன் தேவாரம்–கோம்பை வனப்பகுதி உள்ளது. இங்குள்ள 18–ம்படி, சதுரங்கப்பாறை, சாக்குலூத்து, காப்புகாடு உள்ளிட்ட பகுதிகளில் 10–க்கும் மேற்பட்ட காட்டு யானைகள் உள்ளன. இந்த மலையின் அடிவாரத்தில் சுமார் 1000 ஏக்கருக்கும் மேலான நிலப்பரப்பில் கரும்பு, தக்காளி, நிலக்கடலை உள்ளிட்டவை பயிரிடப்பட்டு வருகின்றன.

இந்த விளை நிலங்களுக்குள் கடந்த 2 வாரங்களாக காட்டு யானைகள் புகுந்து பயிர்களை நாசம் செய்து வருகின்றன. அந்த யானைகளை விரட்டுவதற்கு வனத்துறையினர் உரிய நடவடிக்கை எடுக்காததால், அவற்றின் அட்டகாசம் தொடர்ந்து வருகிறது. அத்துடன் இதனால்

பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு உரிய நிவாரணமும் வழங்கப்படுவதில்லை என்று கூறப்படுகிறது.

<u>அகழி அமைக்கப்படவில்லை</u>

இதுகுறித்து அப்பகுதி விவசாயிகள் கூறும்போது, ‘‘இந்த பகுதியில் உள்ள நிலங்களில் யானைகள் புகுந்து பயிர்களை நாசம் செய்வதை தடுக்க மலையடிவாரத்தில் சுமார் 8 கிலோ மீட்டருக்கும் மேலாக அகழி உருவாக்கப்பட்டது. ஆனால் பாறைகள் அதிகம் உள்ள பகுதிகளில் இதுவரை அகழி அமைக்கப்படவில்லை. இதனால் யானைகளின் அட்டகாசம் தொடர்ந்து வருகிறது. எங்களுக்கு அதிக அளவில் இழப்பு ஏற்படுகிறது. எனவே விளை நிலங்களுக்குள் காட்டுயானைகள் வருவதை நிரந்தரமாக தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்’’ என்றனர்.

## நாகை, திருமருகல் பகுதியில் பரவலாக மழை; விவசாயிகள் மகிழ்ச்சி




நாகப்பட்டினம்,

நாகை, திருமருகல் பகுதியில் நேற்று பரவலாக மழை பெய்தது. இந்த மழையால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

<u>கடுமையான வெயில்</u>

நாகையில் கடந்த சில மாதங்களாக கடுமையான வெயில் மக்களை வாட்டி, வதக்கி வருகிறது. கோடை காலத்திற்கு முன்பாகவே தொடங்கிய வெயில் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கையை மிகவும் பாதிப்படைய செய்தது. இதனால் நாகை பகுதியில் குளிர்பானம், இளநீர், பழச்சாறு உள்ளிட்டவைகளின் விற்பனை களைகட்டியது. வெயிலின் தாக்கத்தால் பெண்கள், முதியோர்கள் உள்பட பெரும்பாலானோர் குடைகளை பிடித்தவாறு அன்றாடம் பணிகளுக்கு சென்று வந்தனர். மேலும், கடைமடை பகுதிகளில் மேட்டூர் அணையில் இருந்து திறந்து விடப்பட்ட தண்ணீர் வராததாலும், மழையும் பெய்யாததாலும் குறுவை சாகுபடி முற்றிலும் பொய்த்து போனது. இதைத்தொடர்ந்து கடந்த ஆகஸ்டு மாதம் மேட்டூர் அணையில் இருந்து பாசனத்திற்காக திறந்துவிடப்பட்ட தண்ணீரை நம்பி கடைமடை விவசாயிகள் சம்பா சாகுபடி பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு வந்தனர். ஆனால் கடைமடை பகுதிகளுக்கு போதிய தண்ணீர் வராததால் விவசாயிகள் வயல்களில் செய்திருந்த நேரடி விதைப்பு மற்றம் நடவு பணிக்காக விடப்பட்டிருந்த பயிர்கள் காயத்தொடங்கியது. மேலும், வெயிலின் காரணமாக வயல்கள் வெடித்து பயிர்கள் கருகின.

<u>திடீர் மழை</u>

இந்நிலையில் நேற்று காலை திடீரென வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. இதையடுத்து காலை சுமார் 9 மணியளவில் லேசான மழை பெய்ய தொடங்கியது. பின்னர் சுமார் 10 மணியளவில் சாரல் மழையாக பரவலாக பெய்தது. இதனால் சாலைகளில் மழைநீர் ஓடத்தொடங்கியது. இருப்பினும் மழை நீண்ட நேரம் நீடிக்கவில்லை. இதைத்தொடர்ந்து அவ்வப்போது வெயில் அடித்தது. கடந்த சில மாதங்களாக வெயில் மக்களை வாட்டி வந்த நிலையில் நேற்று பெய்த மழை பொதுமக்களை மகிழ்ச்சிக்கு உள்ளாக்கியது. இதேபோல்

திருமருகல் பகுதியில் திருமருகல், ஆதினக்குடி, சீயாத்தமங்கை, மருங்கூர், திருச்செங்காட்டாங்குடி, திருப்புகலூர், அண்ணாமண்டபம், திருக்கண்ணபுரம் உள்ளிட்ட பகுதிகளிலும் நேற்று பலத்த மழை பெய்தது. இந்த மழையால் கவலையில் இருந்த விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.